Supplementary for New Cine Today Special Tamil Novel Rs. 8/- 2009 R.Dis. No.1980/2005

**இனிமையான குடும்ப நாவல்கள்**

## அகிலா கோவிந்தின் பிற நாவல்கள்

| | |
|---|---|
| ➢ காதல் தேன் நிலா | 120.00 |
| ➢ தோகை இளம்மயில் | 65.00 |
| ➢ என் இனிய கண்ணாளா! | 80.00 |
| ➢ மன்னவனே வரலாமா! | 70.00 |
| ➢ அன்புள்ள மான் விழியே | 100.00 |
| ➢ எங்கே என் தேவதை | 100.00 |
| ➢ நீ என்றும் அழகுக்கு | 65.00 |
| ➢ அழகு மயிலாள் | 70.00 |
| ➢ கண்மணி நிமிர்ந்து நில்லடி | 65.00 |
| ➢ வருகிறேன் ராஜகுமாரி | 65.00 |
| ➢ காத்திருப்பேன் ராஜகுமாரா | 70.00 |
| ➢ வண்ண மயில் பெண்ணொருத்தி | 85.00 |
| ➢ வா... பொன் மயிலே | 70.00 |
| ➢ பால் வண்ணம் பருவம் கண்டு | 75.00 |
| ➢ காக்கைச் சிறகினிலே | 80.00 |
| ➢ விழியோரப் பார்வையிலே | 70.00 |
| ➢ மைவிழி மானே | 90.00 |
| **லதா சேகர்** | |
| ➢ என்றாவது ஒருநாள் | 80.00 |
| ➢ புன்னகைப் பூக்கள் | 70.00 |
| ➢ எங்கேயும் எப்போதும் என்னில்! | 120.00 |
| **மேகலா சித்ரவேல்** | |
| ➢ ஆனந்த ஆராதனை | 45.00 |
| ➢ கோடை மழை | 50.00 |
| ➢ முத்தழகி | 90.00 |

வெளியீடு: பிரியா நிலையம், சென்னை - 14. தொடர்புக்கு: 94444 62284
வியாபாரிகளுக்குத் தக்க கழிவு தரப்படும். VPP யும் உண்டு.
நூல் கிடைக்குமிடம் - M.O. அனுப்ப வேண்டிய முகவரி
**இலக்குமி நிலையம்**
53, வெண்டியா மடம் சாலை, இராயப்பேட்டை, சென்னை - 14. போன்: 28133658

குறிப்பு: புதிய பெண் எழுத்தாளர்கள் வரவேற்கப்படுகிறார்கள்.
தேர்வு செய்யும் நூல்களுக்கு தக்க சன்மானம் வழங்கப்படும்.

பிரபல புத்தகக் கடைகள் அனைத்திலும் மேற்கண்ட நூல்கள் கிடைக்கும்.





# ராசாத்தி மனசில...

## அகிலா கோவிந்த்

கவிதா அன்றும் வழக்கம் போல் கண்ணாடி முன் நின்று லேசான பேஸ்க்ரீம், கண்களுக்கு சிறிதான கண்மை, காதிற்கு வளைவான தொங்கட்டான்கள் என சின்னதான மேக்கப்புடன் உற்சாகமாகவே அலுவலகம் கிளம்பினாள்.

கிளம்பும்போது தந்தை உலகநாதர் தயக்கமாய், "கவிக்கண்ணு..." என்ற கொஞ்சலுடன் கெஞ்சல் பார்வையாய் வந்து நின்றதுமே அவளுக்கு ஓரளவு விஷயம் புரிந்து விட்டதுதான். தந்தை அவள் படப்படும் அந்த விஷயத்தைப் பற்றித்தான் பேசப்போகிறார் என்று.

ஆனாலும் எதையும் காட்டிக் கொள்ளாமல் ஒன்றும் தெரியாதவள் போல் தான் நடமாடினாள், தந்தை தானாக விஷயத்தை ஆரம்பிக்கட்டும். அதற்குப்பின் பேசிக்கொள்ளலாம்... என்ற எண்ணமே அவளுள் ஓடியது.

அதற்கேற்றார்போல் உலகநாதரும் விஷயத்தை சட்டென அவளிடம் ஆரம்பித்துப்பேச தயங்கிக் கொண்டே இருந்தார். ஆனால கவிதா டிபன் பாக்ஸ் ஹேண்ட் பேக் சகிதமாய் கிளம்பிவிட்டதை அறிந்ததும் இனியும் தாமதிக்கவழியில்லை.. என விஷயத்திற்கு வந்தார். அவர்.



"கவிக் கண்ணு.. இன்று மாலை நீ..." என தட்டுத் தடுமாறி அவர் தயக்கமாய் ஆரம்பித்து முடிப்பதற்குள், "மாப்பிள்ளை வீட்டுக்காரர்கள் பெண் பார்க்க வருகிறார்கள். இன்று நான் அலுவலகத்திலிருந்து சீக்கிரம் வரவேண்டும் அவ்வளவுதானே?" என படபடவென மூச்சு வாங்கச் சொல்லி முடித்து வைத்தாள், அவள்.

அவள் அப்படிச் சொல்லிய விதத்திலேயே அவள் கொண்டிருந்த கோபம் தந்தைக்குப் புரிந்தது.

அவளை சமாதானப்படுத்தும் விதமாய் மெல்ல அவள் பக்கம் வந்து அவள் தலைமுடியை பரிவாய் வருடி கனிவுப் பார்வை பார்த்தார்.

"இல்லை.. கண்மணி.. இது நீ நினைப்பது போல் இல்லை. ரொம்பவும் நல்ல இடம்..." என்றதும் தன் மைவிழிக் கண்களை நிமிர்த்தி நேராகவே தந்தையைப் பார்த்தாள்.

"இதுவும் அந்தத் தரகர் ஏற்பாடுதானே?" என்று அவள் குரல் உயரக் கேட்டபோது, அதுதான் இல்லை.. என வேகமாய் தலையசைத்தார் அவர். "கண்மணி, எனக்குத் தெரியாதா? அந்தக் கல்யாணத் தரகர் மூன்று முறை பணத்திற்கு ஆசைப்பட்டு உனக்குப் பிடிக்காத வரன்களை கொண்டு வந்து வாங்கிக் கட்டிக்கொண்டது... அவர் மட்டுமல்ல... நானும் தானே? அதனால் இம்முறை... என் நண்பர் மூலமாய் வந்த வரன் ஒன்றைத்தான் ஏற்பாடு பண்ணியிருக்கிறேன். நல்ல இடம். நீ எதிர்பார்க்கும் அத்தனை விஷயங்களும் மாப்பிள்ளை வீட்டாரிடம் உண்டு. உனக்கு கண்டிப்பாய் அவர்களைப் பிடிக்கும்...." என்று தந்தை முடித்தபோது கவிதா முகம் மாறினாள்.

அவள் ஓரளவு கோபமும் எரிச்சலும் கொண்டதற்கு சரியான காரணமும் இருந்தது. இதற்கு முன் அந்த கல்யாண புரோக்கர் வரன் ஏற்பாடு செய்கிறேன் என்ற பெயரில் மூன்று முறை அந்த பெண் பார்க்கும் படலத்தை நடத்தினார். மூன்று முறையும் வந்த மாப்பிள்ளை வீட்டுப் பெண்மணிகள் ஐம்பது பவுன், அறுபது பவுன் என அடுக்கிக் கொண்டு போக கவிதா சபை என்றும் பாராது ஓரமாய் ஒடுங்கி நின்றிருந்த அந்தத் தரகரை முறைத்து வெறிக்கத்தான் செய்தாள்.

அவள் சொல்லிய இருபது பவுன் எங்கே... அவர்கள் கேட்கும் ஐம்பது பவுன் எங்கே.. இது கூடவா ஒரு தரகருக்குத் தெரியாது? என அவள் தந்தையிடம் பின்னர் கேள்வி எழுப்பியபோது கிடைத்த பதில்தான் அவளைத் தூக்கி வாரிப் போடச் செய்தது.

"நானும் இதையேதான் கேட்டேன். அதற்கு தரகர் என்ன சொல்றாரு தெரியுமா? சார் அவங்க ஐம்பது பவுன் கேட்கலாம்... ஆனா... உங்க பெண்ணோட அந்தத் தங்கச் சிலை போன்ற அபார அழகில்.. அதுவெல்லாம் காலம் நீ மாதிரி தவிடு பொடியாகிடும். இப்படியொரு மகாலட்சுமி மட்டும் நம் வீட்டுக்கு வந்தாப் போதும். நகைகளே வேண்டாம்னு முடிவுக்கும் வந்திருவாங்க..." என அவர்கள் விளக்கியதை தந்தை சொல்லிய போது அந்தத் தரகரின் நினைப்பைக் கண்டு எரிச்சலாய்த்தான் உணர்ந்தாள்.

ஆனால் வந்த மூன்று வரன்களின் பெண்மணிகளும் பொன்னு அபார அழகுதான். ஆனாலும் இந்த அழகும் அழகுசேர்க்க ஒரு ஐம்பது பவுன் போட்டால் போதும் என்று கோரஸ் பாடியதும், இந்தக் கலியுகத்தில் இதுபோன்ற எதிர்பார்ப்புகள் தவிர்க்க முடியாதவை என கவிதாவுக்கு நனகு புரிந்தது.

மேலும் ஒவ்வொரு முறையும் ஸ்வீட், காரம், காபி என செலவும் செய்து அவள் சந்தை மாடு போல் எல்லோர் முன்னிலையிலும் நிறுத்தி கூசாமல் விலை பேசியது கண்டு ரொம்பவும் கூசத்தான் செய்தாள் அவள்.

சிறு வயதிலேயே தாயை இழந்து விட்டதாலும் சொந்த பந்தங்கள் தூரமாகி விலகிக் கொண்டதாலும், எல்லாவற்றையும் அவளே, அவளுக்காகப் பேச வேண்டிய நிலையும் ஏற்பட்டது.

பேச்சுவார்த்தை முடிவில் தான் நிராகரிக்கப்பட்டதை உணர்ந்ததும், காயம் பட்டதைப் போல் மனது வலித்தது. அந்த மனவலிகளுக்காகவே தந்தையிடம் இன்னும் கொஞ்ச மாதங்களுக்கு இந்தப் பெண்பார்க்கும் நாடகம் வேண்டாம் என கண்டிப்பாய் சொல்லியிருந்தாள்.

ஆனால் அவள் சொன்னதையும் மீறி தந்தை ஏற்பாடு செய்கிறார் என்றால் நிச்சயம் வேறு காரணம் இருக்கும் என்பதை யூகித்தவள் சற்று அமைதியாகி தந்தையைப் பார்த்தாள். "தரகர் மூலம் இல்லாமல் உங்கள் நண்பர் மூலமாகவா?" என்றாள்.

உலகநாதர் தனது அறுபது வயதுப் புன்னகையை பெரிதாக்கியவர், "ஆமாம் கண்மணி, இது எனது மில்லில் வேலை பார்க்கும் நண்பர் ஒருவர் செய்த ஏற்பாடு. மாப்பிள்ளை வீட்டார் பொன் நகை வேண்டாம், புன்னகை போதும் என கேட்கும் ரகம். எல்லாவற்றுக்கும் மேலாய் இந்த வரனில் நீ விரும்பப்பட்ட ஒன்றும் இருக்கிறது..." என உலகநாதர் நிறுத்த ஆவலாகி நிமிர்ந்தாள் கவிதா.

"அது.. நீ.. தேடிய.. விரும்பிய.. கூட்டுக் குடும்பம்! மாப்பிள்ளையைச் சுற்றி அம்மா, அப்பா, அக்கா, தங்கை, தம்பி எல்லா சொந்தங்களும்



கூட்டுக் குடுத்தனமாய் ஒரே வீட்டில் வசிக்கின்றார்கள்...." என்றவாறு தந்தை மாப்பிள்ளையைப் பற்றி அவர்கள் வீட்டாரைப் பற்றி விவரித்துக் கொண்டே போக.... அவள் முகத்தில் பெரும் திருப்தி அலை ஒன்று பரவியது.

சிறு வயதிலேயே தாயைப் பறிகொடுத்து அவளும் தங்கையும் தந்தையின் அரவணைப்பிலேயே வளர்ந்த தாலே... தனக்கு கிடைக்காமல் போய்விட்ட தாய்ப் பாசத்தை ஒரு பெரும் குறையாகவே தன் உள்ளுக்குள் கருதினாள் அதனாலே தனக்கு கூட்டுக்குடுத்தனமான குடும்பத்தில் மணமகளாகும் வாய்ப்புக் கிடைத்தால் மிக மிக சந்தோஷம் என விளக்கியிருந்தாள்.

அவள் நினைத்தது போலவே தந்தை சொல்லியதும் அவளையறியாமல் ஒருவகை உவகை மனதுள் பிறக்கத்தான் செய்தது... அதைவிட எப்படியும் இந்த சம்பந்தம் நல்ல படியாக முடிந்துவிடும் என சந்தோஷபட்சி ஒன்று அசரீரி போல் தோன்றவும் ஆரம்பித்து விட்டது.

இருந்தாலும் தன் பரபரப்பை அடக்கிக் கொண்டவளாய் தந்தையைப் பார்த்தாள். நம்மைப் பற்றிய எல்லா விஷயங்களையும் சொல்லி விட்டீர்கள்தானே? என்றாள்.

அதற்கும் உலகநாதர் பலமாய் தலையசைத்தார். "ம்ம்.. சொல்லி விட்டேன்மா.. நீ கல்யாணத்திற்குப் பின் வேலைக்குப் போவதும் போகாததும் கூட உன் இஷ்டம்தான் என இப்போதே சொல்லிவிட்டார்கள்... அப்புறம் மாப்பிள்ளை தனியார் நிறுவனம் ஒன்றில்தான் அதிகாரியாய் பணியாற்றுகிறாராம். நல்ல சம்பளமாம். அவர் பெயர் கூட.... ஏதோ.. ம்ம்... ஞாபகம் வந்துவிட்டது. மகேந்திரன் ... அதுதான் அவரது பெயர்....!" என்று உரையை முடித்தார் தந்தை உலகநாதர்.

"மகேந்திரன்..." என தனக்குள் மெலிதாய் உச்சரித்துப் பார்த்தாள் நிர்மலா. அப்படி உச்சரிக்கும் போதே அவள் கன்னக்கதுப்புகள் கூடவே முகம் சிவக்கவும் ஆரம்பித்தது.

ஒரு வழியாக அப்பாவிடம் தன் ஒப்புதலை சொல்ல மாலை சீக்கிரம் வருவதாக உறுதி கூறிவிட்டு கிளம்பினாள் கவிதா.

ஹேண்ட் பேக்கை தோளில் மாட்டிக்கொண்டு வெளிவருகையில் தங்கை பாமா புத்தகச் சுமையுடன் தயாராயிருந்தாள். இருவரும் தந்தையிடம் விடைபெற்று விட்டு பஸ்ஸைப் நோக்கி நடந்தனர்.

அப்படி அவர்கள் பேசியபடி நடந்ததில் சீக்கிரமே பஸ்ஸ்டாப்பும் வந்துவிட்டது. பஸ் ஸ்டாப்பில் அவளது பள்ளித் தோழிகள் சில பேர் நிற்பதைப் பார்த்ததும் பாமா பரபரப்பாய்த்தான் ஆனாள்.

அவளது நிலையறிந்தவளாய் கவிதா அவளுக்கு புன்னகையுடன் விடை கொடுத்து தனது பேருந்துக்கான மறுபுற நிறுத்தத்திற்கு வந்தாள்.

மணியைப் பார்த்தாள். எட்டு மணியை நெருங்கிக் கொண்டிருந்தது. அவள் அலுவலகத்திற்கான பஸ் வரும் நேரம்தான். பொக்கேக்கள், மலர்ச் செண்டுகள் தயாரிக்கும் உலர் பூ ஏற்றுமதி நிறுவனம் ஒன்றில் உற்பத்திப் பிரிவில் வேலை பார்த்து வந்தாள்.

சரியாய் காலேஜ் டிகிரியை அவள் முடிக்கும் நேரமும் தமிழாசிரியராய் பணியாற்றிய அவளது தந்தை ஓய்வு பெறும் நேரமும் சரியாயிருந்தது. அதனாலே டிகிரி முடித்த கையோடு பைலை எடுத்துக்கொண்டு கம்பெனி கம்பெனியாய் வேலை கேட்டு ஏறி இறங்க ஆரம்பித்து விட்டாள்.

தந்தை உலகநாதர் கூட, "நான் ஓய்வு பெற்று விட்டால் என்ன? மாதம் பத்தாயிரம் ரூபாய் பென்ஷன் வருமே.. அது போதாதா? நீ ஏனம்மா வேலை தேடி கஷ்டப்படவேண்டும்..?" என தடுத்தும் பார்த்தார்.

ஆனால் கவிதாதான் பிடிவாதமாய் இருந்தாள். உங்களை உட்கார வைத்து நான் சாப்பாடு போட வேண்டும். அது என் நெடுநாள் ஆசை... எனச் சொல்லி இரண்டு மாதங்கள் அலைந்து திரிந்து இந்த உலர் பூ கம்பெனியின் சூப்பர்வைசர் வேலை ஒன்றைத் தேடிக்கொண்டாள்.

அவளது தாவரவியல் படிப்புக்கு ஏற்ற வேலை என்பதால் அவளுக்கு வேலை மிகவும் பிடித்துப் போனது. வெளிநாட்டு ஏற்றுமதி நிறுவனம் என்பதால் எடுத்த எடுப்பிலேயே சம்பளமாய் பத்தாயிரம் ரூபாயைத் தர... அவளுக்கு ஒரே இன்ப அதிர்ச்சியாய்த்தான் இருந்தது.

அன்று அதே சிந்தனையுடன் பஸ்ஸில் ஏறி தன் அலுவலகத்தை அடைந்தாள். தனது இருக்கையில் போய் அமர்ந்ததும் வீட்டு நினைவுகள் எல்லாம் ஒதுக்கிவிட்டு வேலையில் கவனம் செலுத்தினாள்.

அவள் அந்த உலர் பூ பிரிவின் செக்ஷன் சூப்பர்வைசர் என்பதால் உலர் பூ உற்பத்தியின் எண்ணிக்கை, பாக்கிங் செய்யப்பட வேண்டிய பூக்களின் தொகைகள் என எல்லாவற்றையும் பணியாளர்களை வேகப்படுத்தி வேலை வாங்க வேண்டிய பொறுப்பு அவளுக்கு.

இருந்தாலும் தினக் கூலிகள் தானே என தன் கீழ் வேலை பார்க்கும் பணியாளர்களை பார்க்காமல், அவர்களை விரட்டி வேலை வாங்காமல் இன்முகமாகவே பேசி செயல்படுவாள் கவிதா.

அவளது புன்னகை முகமும் வேலையைச் சொல்லும் பாங்குமே பணியாளர்களுக்குப் பிடித்துப் போய் அவள் சொல்லும் பணியை மின்னல் வேகத்தில் செய்து முடிக்க ஆரம்பிப்பர்.



இதையெல்லாம் கண் கூடாய் பார்க்கும் கம்பெனி மேனேஜரும் தன் பங்கிற்கு கவிதாவை "யூ... ஆர்... கிரேட்! நீ வேலை வாங்கும் விதம் மிகவும் பாராட்டுக்குரியது..." என வானளாவப் புகழ்ந்தும் செய்தார்.

அன்றும் இன்முகமாகவே வேலையில் ஆழ்ந்தவள் நேரம் போவது தெரியாமல் தான் மூழ்கி விட்டாள். மதிய உணவு இடைவேளையின் போதுதான் அப்பா சொன்ன வரன் விஷயம் ஞாபகத்திற்கு வந்தது. மேனேஜரிடம் சென்று மாலை ஒரு மணி நேர விடுப்பு பர்மிஷன் சொல்லி விட்டு வந்தாள்.

சொன்னபடியே மணி மூன்றை நெருங்கியதும் அலுவலகத்திலிருந்து கிளம்பி விட்டாள். அவள் திரும்பவும் வீட்டிற்கு வந்தபோது மணி மூன்று ஐம்பது. அப்பா பக்கத்து ஸ்வீட் ஸ்டால் ஒன்றில் இனிப்பு கார வகைகளை, தயாராய் வாங்கி வைத்திருந்தார்.

"சரியாக ஐந்து மணிக்கு வருவதாகச் சொன்னார்கள் அம்மா...". என்றதும் கவிதா வேகமாய்த் தான் செயல்பட்டாள். அவளது வீட்டின் முன்புற சிறிய அறையை ஒழுங்குபடுத்தி, சோபாக்கள், நாற்காலிகளை சரிசெய்து, ஆங்காங்கே அவர்களில் படிந்திருந்த ஒட்டடை கறைகளை துடைத்தெடுத்தாள்.

நாலரை மணிக்கு வீடு திரும்பிய தங்கை பாமா வரும்போதே பக்கத்து பால் பூத்தில் பாலும் வாங்கி வந்துவிட எல்லா வேலைகளும் சுளுவாயிற்று.

சரியாக ஐந்து மணிக்கு வாடகைக் கார் ஒன்றில் மாப்பிள்ளை வீட்டார் வந்து இறங்கி விட்டனர். உலகநாதர் இன்முகமாய் வரவேற்று வீட்டினுள் அவர்களை உட்கார வைத்தார். பாமா ஸ்வீட், காரம், காபி என ஒவ்வொன்றாய் பரிமாறினாள்.

அடுத்த ஐந்து நிமிடத்தில் பட்டுச் சேலையில் தங்கச் சிலையாய் அவர்கள் முன் தோன்றினாள் கவிதா! மாப்பிள்ளை வீட்டிலிருந்து மாப்பிள்ளையின் தாயார், அக்கா, தங்கை, அண்ணி, பேரக் குழந்தையான வாண்டுகள் என ஒரு சிறு பட்டாளமே வந்திருந்தது.

கவிதா முதலில் தன்னை உற்று உற்று நோக்கிய அவர்களைக் கண்டு மிரண்டாலும் அடுத்த ஐந்து நிமிடத்தில் அவர்கள் பேச ஆரம்பித்ததும் சகஜமாகிவிட்டாள்.

எல்லோருமே அவளிடம் ஆர்வமாய் ஒருவித உரிமையுடனே பேச ஆரம்பித்து விட்டனர். அதிலும் மாப்பிள்ளையின் தங்கை மல்லிகா கிட்டத்தட்ட தங்கை பாமா போலவே சுட்டித்தனமாய் இருந்தாள். பேச ஆரம்பித்த கொஞ்ச நேரத்திலேயே பக்கத்தில் வந்து உரிமையுடன் கைகளைக் கட்டிக் கொண்டாள். அவள்தான் அப்படியென்றால் மாப்பிள்ளையின் தாயார் அன்னபூரணி ஒரு

தாயின் பரிவோடு அவள் பக்கம் வந்து அன்பாய் அவள் தலை முடியை கோதி விட்டபோது இனிமையாய் உணர்ந்தாள் கவிதா.

"சிறுவயதிலேயே தாயை இழந்து விட்ட உன்னை என் வீட்டுப் பெண் போலவே பார்த்துக் கொள்வேன் கண்ணு..." என்று அன்னபூரணி சொன்னபோது சிலிர்த்துத்தான் செய்தாள்.

வந்த சிறிது நேரத்திலேயே மாப்பிள்ளை வீட்டுப் பெண்கள் எல்லோரும் கலகலவென எல்லோரிடமும் சகஜமாய் சிரித்துப் பேசி ரொம்ப நாள் பழகியது போன்ற நிலையை ஏற்படுத்தி விட்டனர். உலகநாதர் தயக்கமாய் "பெண்ணை உங்களுக்குப் பிடித்திருக்கிறதா?" என வினவ, "என்ன பிடித்திருக்கிறதா?" வா...! "இப்போதே எங்கள் வீட்டுக்கு அழைத்துச் செல்ல நாங்கள் ரெடி." என்றாள் வாண்டுத் தங்கை மல்லிகா முந்திரிக் கொட்டையாய்.

பெரும் சிரிப்பலை பரவி அங்கு அமைதியாகியது. உலகநாதருக்கு பெரும் திருப்தி கவிதாவின் நிலை அறிய ஆவலாய் அவளை உற்றுப் பார்த்தவர், கவிதா தலையசைத்ததைப் பார்த்ததும் பெரும் மகிழ்ச்சியும் கொண்டார்.

தங்கை பாமாவும், விடாது கவிதாவின் பக்கம் வந்து கைகளை அழுத்தினாள். "என்ன... ஓகேதானே?" என்றாள். கவிதா புன்னகையுடன் தலையசைத்து பதிலுக்கு அவள் நிலையைக் கேட்டதும் "எனக்கு டபுள் ஓகே!" என்றாள்.

❖❖❖



**2**

நாட்கள் கடகடவென உருண்டோடியது.இதோ இன்று மணநாள்! மகேந்திரனுக்கும் அவளுக்கும் நகரின் முக்கிய திருமண மண்டபம் ஒன்றில் கல்யாணம்!

எப்போதோ பார்த்த சொந்த பந்தங்கள் எல்லாம் அன்று ஒன்று கூடி விட்டனர்.வீட்டில் என்றுமில்லாத அளவிற்கு மகிழ்ச்சிதான்! சந்தோஷம்தான்!

ஆள் ஆளுக்கு உறவுகள் சொந்த பந்தங்கள் அவளை அப்படி இப்படியென இழுத்து அலங்காரம் பண்ணிக்கொண்டிருந்தனர். "பாவம் கவிதா தாயில்லாப்பெண்" என அவர்கள் முணுமுணுப்பது வேறு அவள் காதில் விழுந்தது.



அவர்கள் சொல்லிக் காட்டியதாலோ என்னவோ கவிதாவிற்கு அடிக்கடி தாயின் பிரிவு உறுத்து கொண்டே இருந்தது. சுவரில் மஞ்சளும் குங்குமமுமாய் போட்டோவில் சிரித்துக் கொண்டிருந்த தாயின் படத்தையே வெறித்தாள்.

உறவுகள் சொல்வது போல் இந்நேரம் அம்மா மட்டும் உடன் இருந்தால் எப்படி இருக்கும் என்ற நினைப்பு ஓடியது. சிறுவயதிலேயே தான் இழந்துவிட்ட தாயின் அன்பு மிகப்பெரிய இழப்பு என்றே வருந்தினாள். கிடைத்தற்கரிய அந்த அன்பிற்கு வேறெதையும் ஈடு சொல்ல முடியுமா? எனவும் தவிப்பு எழுந்தது.

இழந்தது இழந்ததுதான். இனி அதற்காக வருத்தப்பட்டு பிரயோஜனமில்லைதான். ஆனால் இந்த வருத்தங்கள் எல்லாம் ஒன்று விடாமல் மகேந்திரனிடம் சொல்ல வேண்டும். அவனது அன்பு அவன் காட்டும்பரிவுதான் இனி தனக்கு எல்லாமுமாக வேண்டும் எனவும் நினைத்துக் கொண்டாள்.

ஆனால் அதற்கு மேல் யாரும் அவளை பழைய விஷயங்களை தோண்டி சிந்திக்கும்படி விடவில்லை. யாரோ அவளை எழுப்பினார்கள் படபடவென அழகு படுத்தி அலங்காரத்தேராய் மாற்றினார்கள் மலர் மாலைகளுடன் பரிவாரமாய் கூட்டி வந்து காரில் ஏற்றினார்கள். மண்டப வாசலில் இருந்து மேள வாத்தியங்களுடன் அழைத்துச் செல்லப்பட்டு கொஞ்ச நிமிடங்களில் மணமேடையில் மணப்பெண்ணாய் வெட்கத்தில்நாணித் குனிய உட்கார வைக்கப்பட்டாள் அவள்.

அடுத்த கொஞ்ச நிமிடங்களில் பக்கத்தில் பட்டு வேஷ்டி பட்டுச்சட்டை பளபளப்பில் கம்பீரமாய் வந்து உட்கார்ந்தான் மகேந்திரன். உட்கார்ந்தவன் சும்மா இருக்காமல் மெல்ல யாரும் பார்க்காமல் அவள் கைகளைக் கிள்ளினான்.

அந்த நிகழ்வின் மூலமே அவனுக்கு குறும்பும் நகைச்சுவை உணர்வும் உண்டு என்பதை அவளால் புரிந்து கொள்ள முடிந்தது.

அதை உறுதிப்படுத்தும் வண்ணம் அடுத்த வந்த அத்தனை சடங்குகளிலும் தனது குறும்புத்தனத்தைக் காட்டி அவளைத் திணறடித்தான். அவன் யாரும் கவனியா வண்ணம் அவள் இடையை இழுப்பதும் விரல்களை நிமிண்டுவதும், தொடைகளில் கூப்பிடுவதுபோல் தட்டிக்கொண்டும் செல்லமான சேஷ்டைகளை அவன் பாட்டுக்குச் செய்து கொண்டே கோப முகம் சிவந்தவள் நாணிக் கோணியவள் மறுகணம் தனக்கும் ஒரு சந்தர்ப்பம் கிடைக்கும் என காத்திருந்து பட்டுத்துணியால் சம்பிரதாயப்படி இருவரது கைகளையும் இணைத்து தூயர் கட்டிவிட,அதுதான் சாக்கு என்று அவளும் நறுக்கென அவன் விரல்களை கிள்ளிவிட்டாள்.

"என்ன...ஆ...ஆஆ..."என மெல்லிய சுத்தல் குரலோடு அவனைப் பார்த்தவள் கோப்பெருந்தேவியா..அம்மாவா? என அதிசயித்தாள். அவள் தவிப்பதை ரசித்து மனம் முழுக்க சிரித்தான். கம்பீரமான ஆண்மை பொங்கும் அவன் அழகை ஒரு கணம் கண் இமைக்காமல் பார்த்தாள். தான் நினைத்தது போலவே அமைந்துவிட்ட பூரிப்பு அவளுக்கு!

மணமேடையில் எல்லோரும் சுற்றி இருக்கிறார்கள் என்பதைக் கூட அவன் பொருட்படுத்தாமல் அவளைப் பற்றியே நினைக்கிறான். அவளிடமே குறும்பாய்விளையாட நினைக்கிறான் என்பதை உணர்ந்தபோது ஒருபுறம் அவளுக்கு சந்தோஷமாகவும் இருந்தது. இப்படித்தான் அவன் கவனம் அவன் அன்பு முழுவதும் தனக்கே சொந்தமாகவேண்டும் என்ற நினைப்பும் ஓடியது. அதற்காக அதைப் பெற அவளும் அவன் மனம் கோணாமல் நடந்து கொள்ள வேண்டும் என்றும் அப்போதே உறுதியெடுத்துக் கொண்டாள் அவள்.

மணமக்களின் இந்த ரகசிய சேஷ்டைகளைப் பார்த்த அக்கா மாலினியும் கூடத் தங்கை மல்லிகாவும் சும்மா இருப்பார்களா? அவர்களும் தங்கள் பங்கிற்கு குறும்பு பண்ணி இருவரையும் கலாய்த்தனர்.

சரியான முகூர்த்த நேரத்தில் மங்கள ஒலிகள் ஒலிக்க அவள் கழுத்தில் தாலியை கட்டினான் அவள் தலையைச் சுற்றி கைகளைக் கொண்டு வந்து நெற்றியில் அவன் முதல் திலகமாய் பொட்டிட்டபோது சிலிர்த்தது அவளுக்கு.

அடுத்து தந்தையின் கால்களில் இருவரும் விழுந்து ஆசீர்வாதம் வாங்கினார்கள் குனிந்து கால்களை வணங்கிவிட்டு நிமிர்ந்த கவிதாவிற்கு தந்தையின் கலங்கிய கண்களைப் பார்த்ததும் அவளையறியாமல் கண்களில் நீர் சுரந்தது.

தாயில்லாத தன்னை வளர்த்து படிக்க வைத்து ஒரு நல்ல நிலைக்குக் கொண்டு வர எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பார்..தன் மீது எவ்வளவு அன்பு கொண்டிருப்பார் இப்போது அவரைப் பிரிந்து செல்ல வேண்டிய சூழ்நிலை வந்து விட்டதே என்ற நினைப்பும் எழுந்து அவளை மேலும்வருத்தம் கொள்ள வைத்தது. கைகளைக் கட்டிக் கொண்டு அழப்போனவளை சூழ்நிலை உணர்ந்து ஆறுதல் படுத்தினார் உலகநாதர்.

அதன் பின் வரிசையாய் சடங்குகள், சம்பிரதாயங்கள், மணமக்களை வாழ்த்துவது, பரிசுப் பொருட்களைக் கொடுப்பது என ஒவ்வொன்றாய் நடந்து மாலை ரிஷப்ஷனில் இருவரது அலுவலக நண்பர்கள், தோழிகள் என ஒரு பெரிய பட்டாளமே வந்துவிட்டது எல்லோருமே சரியான ஜோடி மேட்ச்சார் நச் அது என அவர்கள் காதுபடவே முணுமுணுத்து புகழ்ந்தது இருவரையும் பூரணப்படுத்தியது.

சாந்தி பண்ணே.....



அதிலும் நிர்மலா மாலை ரிஷப்ஷனுக்கு தங்க நிற ஜரிகை பார்டர் சேலை ஒன்றை தேர்ந்தெடுத்து கட்டியிருந்தாள். அதன் பளபளப்பும் உடம்பை ஒட்டிய அதன் நளினமும் அவள் அழகை மேலும் உயர்த்திக் காட்டின.

மகேந்திரன் அதைத் தன் முதல் பார்வையிலேயே உற்றுக் கவனித்து கண்டுபிடித்த."அடடா கோப்பெருந்தேவி இப்போது கோப்பெருந்தேவதை யாகிவிட்டார்களே!" என வர்ணிக்கவும் செய்தான்.

போட்டோவுக்காகவும் சரி வீடியோவுக்காகவும் சரி எங்கோ பார்த்துப் பேசிக் கொண்டிருந்த அவள் முகத்தை கைகளால் திருப்பி வழிப்படுத்தினான். தம்பதிகளுக்கு பரிசளிக்க வந்த அவனது ஒவ்வொரு அலுவலக நண்பர்களையும் அவளுக்கு நன்கு விளக்கமாய் அறிமுகப்படுத்தி வைத்தான்.

ஒருவாறு ரிஷப்ஷன் முடிந்து இரவு உணவினையும் முடித்தவர்கள் அடுத்து சாந்தி முகூர்த்தம், முதலிரவு. அவர்களுக்காக அலங்கரிக்கப்பட்ட தனியறையில் இருவரையும் விட்டுவிட பால் சொம்புடன் வெட்கமாய் வந்தவளைப் பிடித்து அப்படியே கரங்களால் வளைத்து தன் மடியில் உட்கார்த்தி வைத்தான் மகேந்திரன்.

சிணுங்களுடன் விலக முயற்சித்தவளை அவனது இறுக்கமான கரங்கள் தடுத்து நிறுத்தியது. "ம்ம் உன்னிடம் நிறைய பேச வேண்டும்..அதுவும் விடிய விடிய' என்றான் அவன்.

சட்டென அவன் ஸ்பரிசத்தால் ஏற்பட்ட கூச்சம் அவனது பேச்சால் விலகியது.

"அப்படி என்ன பேச வேண்டும்?' என்றாள் அவள் ஏதும் தெரியாததுபோல்

'உன்னைப்பற்றி என்னைப்பற்றி நம் இருவரையும் பற்றி இன்று முழுக்க பேசிக் கொண்டிருக்க வேண்டும் சரியா?' என்ற போது காதுமடல்கள் அதிர அவள் பெரிதாய் தலையசைக்கத்தான் செய்தாள்.

அவன் தன்னைப் பற்றி தன் விருப்பு வெறுப்புகள் என எல்லாவற்றையும் சொன்னான்.

பின் அவள் விருப்பு வெறுப்புகளை கேட்டான்.

அவள் ஒரே வார்த்தையில் அன்பு என்றாள் உங்கள் அன்பும் உங்கள் வீட்டார் அன்பும் முழுதாய் எனக்கு வேண்டும் என்றாள்.

'கண்டிப்பாகக் கிடைக்கும்' என்றபடி அவன் சிரித்தான் அவளுக்குப் புரிய வைக்க இறுக அணைத்து விடுவித்தான். பின் ரூமின் ஜன்னல் கதவைத் திறந்து விட்டான்.

வெளியே இருளுக்கு நடுவே பால் வெண்மையாய் நிலா. மின்னும் நட்சத்திரங்கள் தெரிந்தது. அருமையான அந்த இயற்கையை அப்படியே அவளது தோளில் கன்னம் பதித்து ரசித்துப் பார்த்தான்.

அவளும் எதுவும் பேசாமல் அமைதியாக அதையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

பொதுவாக வீட்டு மொட்டை மாடியில் தங்கை பாமாவுடன் உட்கார்ந்தபடி நட்சத்திரங்களை எண்ணுவது கவிதாவின் வழக்கம்.

ஒவ்வொரு நட்சத்திரமும் ஒரு தோழியாம், நண்பனாம், நன்கு தெரிந்தவர்கள் பிரியமானவர்கள் தோழிகள் என ஒவ்வொரு பெயராய் நட்சத்திரத்திற்குச் சூட்டி எண்ணுவார்கள். எண்ணி முடித்ததும் ஆ! நமக்கு இவ்வளவு நண்பர்களா? என வியப்பார்கள்.

இதை அப்படியே அவன் தோளில் சாய்ந்தபடியே சொன்னாள். "அட இதென்ன கிறுக்குத்தனம்?' என்று சொல்லப் போகிறானோ என நினைத்தவளுக்கு அவன் தன்னையே ரசித்துப் பார்த்தது பெரும் ஆச்சரியத்தை உண்டுபண்ணியது

என்ன அப்படி பார்க்கிறீர்கள்? என்றாள் விழிகளை உயர்த்தி

"நானும் இப்படித்தான் எண்ணி நட்சத்திரங்களைப் பார்ப்பேன் அதுபோல்தான் உன் சிந்தனையும்..உன் ரசனையும் நல்ல பொருத்தம் நமக்கு!"

சொல்லியபடி அவள் அவன் விரல்களோடு தன் கரங்களைக் கோர்த்து மெல்ல அழுத்தினாள். ஒருவரையொருவர் புரிந்து கொண்டு லேசாகத் தொடுவதில் அந்தச் சின்ன ஸ்பரிசத்தில்தான். என்ன ஒரு ஆனந்தம்? என்ன ஒரு சந்தோஷம் அதை ஒரு கணம் கண்களை மூடி முழுமையாக அனுபவித்தாள். அவன் அப்படியே அவள் முகம் நிமிர்த்தி அவள் பக்கமாய் முழுவதும் திரும்பினான்.

'கவிதா' அழகான பெயர்! ரசித்து உச்சரித்துப் பார்த்தவன் உன்னை நான் எப்படி அழைப்பது? என்றான்.

"எப்படியென்றால்?" என புருவம் உயர்த்தியவள் வீட்டில் எல்லோரும் கவி என்றே அழைப்பார்கள் என்றாள் அவசரமாக

"கவி" நன்றாகத்தான் இருக்கிறது அப்படியே நானும் சொல்கிறேன்" என்றபோது அவள் அவன் பெயரை ஆராய்ச்சி பண்ணிக்கொண்டிருந்தாள்.

அதற்குப்பின் அவளுடன் இலகுவாக அவனால் பேச முடிந்தது அவளது பிறந்தகம் பற்றி விருப்பு வெறுப்புகள் பற்றி அக்கறையாய்க்கேட்டான்



இது கூட்டுக் குடும்பம் உன்னால் அட்ஜெஸ்ட் செய்து இருந்து கொள்ளமுடியுமா? என்று கேட்டபோது காது மடல்கள் அதிர வேகமாய்த் தலையசைத்தாள்.

கண்டிப்பாக இப்படி கூட்டுக்குடும்பத்தில் இருப்பது என் ஆசையும் கூட என வார்த்தைகளாலும் உறுதி கூறியபோது அவள் முகத்தில் சிறு கவலை ரேகை தோன்றி மறைவதைக் கண்டான்.

இப்படியும் அப்படியுமாக ஒரு மணி நேர பேச்சுக்குப் பிறகு பேச்சு நின்றது.

அவன் தயக்கமாய் அவளைப் பார்த்தான்.

"அத்தோடு இன்னொரு விஷயம் கவி நீ தவறாக எடுத்துக்கொள்ளகூடாது..." என்றான்

தயங்காமல் சொல்லுங்கள் என்றாள் கண்கள் முழுவதையும் விரித்தபடி

"என் வீட்டில் உள்ளோர் எல்லோருக்கும் வெவ்வேறு குணாதிசயங்கள் உண்டு. அவர்களை அவ்வாறே அப்படி அப்படி ஏற்றுக் கொள்ள நீ பழகிக் கொள்ள வேண்டும்.

அது ஒன்றும் பெரிய விஷயமில்லை எல்லோரிடமும் பணிவாய் நடந்து கொள்கிறேன். என்றாள்.

சிரித்தான் மகேந்திரன்

"பணிவாய் நடந்து கொள்வது பெரிதில்லை. புரிந்து நடந்து கொள்ள வேண்டும்."

புதிராய் இருந்தது கவிதாவிற்கு

ஒருவித பயமாகவும் முதல்முறை தோன்றியது.

அவள் பயப்படுவதை உணர்ந்து அவள் நுனி மூக்கை கிள்ளி ஆட்டினான். "அதற்காக இப்படியெல்லாம் பயப்படவேண்டாம். உன்னை யாரும் கடித்து தின்று விட மாட்டார்கள்..! என்றான்.

இம்முறை பளிரென சிரித்தாள்.

இருளின் மெல்லிய வெளிச்சத்தில் மறுபடியும் அவள் அழகை ஆசை தீர பார்த்து ரசித்தவன் அப்படியே அவளை நேராய் இழுத்து நெஞ்சோடு அணைத்தான்.

மெல்ல குனிந்து அவள் இதழ்களில் முத்தமிட்டு சிலிர்ப்படையச் செய்தான்.

அவளுக்குத் திடீரென அது ஞாபகம் வந்தது.



PC

"எனக்கும் வாழ்க்கையைப் பற்றி சில எண்ணங்கள் உண்டு" என்றான், சொல்லிவிட்டபடியே அவள் பதில் பேசாமல் தன் கைப்பையிலிருந்து அதை எடுத்து கண்பித்தாள்.

சின்ன சாக்பீஸ் அது!

"இது எதற்கு?" என்றான் அவன்

"அவள், "பொறுங்கள்" என்றபடி கட்டிலுக்கு சில அடி தூரம் முன்னால் நடந்து சென்று சாக்பீசால் பெரிய கோடிழுத்தாள்.

"இது ஒரு வரைமுறை இந்தக் கோட்டிற்கு அப்பால் நாம் இருவரும் பிரச்சினைகள் இல்லாத சந்தோஷமான விஷயங்களை மட்டும் பேச வேண்டும். அப்படி ஒரு பழக்கம் நாம் வைத்துக் கொள்வோமா?" எனது சிறு வேண்டுகோள் இது"

"நல்ல பழக்கம்! வேண்டுகோள் ஏற்கப்பட்டது! என்றான் சிரிப்பாய்.

"அப்புறம் இன்னொன்று..."

"ம்ம் சொல்லலாம்..."

"தினம் இரவு குட்நைட் சொல்லிப் படுக்கப்போகும் முன் இருவரில் யாராவது ஒருவர் ஜோக் சொல்லவேண்டும் அந்த ஜோக்கை ரசித்தபடி சிரிப்புடன் நாம் தூக்கத்தில் ஆழ்ந்து கொள்ள வேண்டும் சரியா?" என்றாள்.

"ஜோக்கா? நல்ல ஜோக் இதுதான்!" என ரசித்துச் சிரித்தவன் சின்ன சிந்தனையுடன், "நீ சொல்வது சைக்காலஜியாக நல்ல அப்ரோச்! சிறந்த நடைமுறைப் படுத்த வேண்டிய யோசனை என்றவன் சிரிப்பைத் தொடர்ந்தபடி, "ஆனால் ஜோக் விஷயத்தில் கொஞ்சம் நான் வீக்தான். அதனால் நீ ஒன்றும் பயப்படவேண்டாம் உன்னை கிச்சு கிச்சு மூட்டியாவது என் பங்கிற்கு சிரிக்க வைத்து விடுகிறேன் போதுமா? என்றபோது அவளும் விழுந்து சிரித்தாள்.

மறுபடியும் அவள் சிரிக்க முனைந்தபோது சட்டென கைகளை உயர்த்தி நிறுத்தியபடி- "கொஞ்சம் அந்த சிரிப்பை வெளியே விட்டு விடாமல் அப்படியே வைத்துக்கொள். இன்று என் பங்கிற்கு ஒரு ஜோக்கை சொல்லி விடுகிறேன்" என்றவன் ஜலதோஷம் ஏன் பிடிக்கிறது தெரியுமா!, என்றான்

அவள் புரியாமல் ஏன்! என்றாள்

"நம் மூக்கில் மேல் இரண்டு ஜல் இருக்கிறதே அதனால்தான்! என்றபோது அவள் அடக்கி வைத்த சிரிப்பை முழுவதுமாய் மலரவிட்டாள் அவள்.





3

தினமும் இரவு எப்போது பேசினார்கள் எப்போது பேசி முடித்தார்கள் எப்போது தங்களை மறந்து அயர்ந்து தூங்கினார்கள் என்றெல்லாம் கவிதாவுக்கு ஞாபகமில்லை.

ஆனால் அவ்வப்போது மகேந்திரன் மென்மையாய் அவள் நெற்றியில் முத்தமிட்டு குட்நைட் சொல்வது ஞாபகத்திற்கு வந்தது. அதற்கு முன் அவள் கைகளை வருடியபடி, "மற்ற விஷயங்களுக்க அவசரமில்லையே இன்னும் கொஞ்சம் புரிந்து கொண்டபின் முன்னேறலாம் என பார்க்கிறேன்" என்று சொன்னபோது அவன் சொன்னதின் அர்த்தத்தை உணர்ந்து அவள் முகம் சிவந்தாள்.

தினமும் நெற்றியில் இதமாய் முத்தமிட்டதும் அவள் அவன் மார்பில் கோழிக் குஞ்சாய் ஒண்டிக்கொண்டதும் பதிலுக்கு அவனை மலர்கொடியவளை நெஞ்சோடு இறுக்குவது போல் நோகாமல் தனது கரங்களால் அவளை வளைத்து அவன் அணைத்துக் கொண்டதும் இந்த சுகம் ஒன்று போதுமே என அவளை கிறங்க வைத்து அவள் மைவிழிக் கண்களை துயில் கொள்ளவும் செய்தது.

அதிகாலைசுற்றுமணிக்கு அவளுக்கு விழிப்பு தட்டியதும்மெல்ல இமைகளைப் பிரித்துப் பார்ப்பாள்

நேற்று வரை இல்லாமல் இன்று திடீரென யாரோ ஆடவன் ஒருவன் நெஞ்சில் பொதிந்து படுத்துக்கொண்டு என திடுக்கிடலாய் ஒரு கணம் நினைத்து மறுகணமே மகேந்திரனின் கம்பீரமுகத்தைப் பார்த்து அமைதியடைவாள்.

கல்யாணம் என்பது ஒரே நாளில் அவளையே அவளின் அடிப்படையையே மாற்றி விடுகிறதே என எண்ணினாள்.

இரவு முழுவதும் அவன் நெஞ்சில் படுத்து தன்னை மறந்து துயில் கொண்டிருக்கிறோம் என்பதை உணர்ந்ததும் கன்னக்கதுப்புகள் கூடேற முகம் சிவக்கலானாள் அவள்.

அவள் மட்டுமா அப்படி? அவளை இதமாய் அணைத்து வளைந்திருந்த மகேந்திரனும் அவளது பிடியை விடவில்லையே மெல்ல நிமிர்ந்து விழிகள் படபடக்க அவன் முகத்தைப் பார்த்தாள்.

ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தான் அவன். தூங்கும்போது கூட அந்த பொலிவு ஒரு அசாத்திய கம்பீரம் அவனுக்கு!

வியப்புடன் அதை பார்த்தவள் மெல்லவே அவன் கரங்களை விடுவித்து உறக்கம் கலையாவண்ணம் அவன் பிடியில் இருந்து வெளியே வந்தாள்.

கட்டிலை விட்டு ஓசையில்லாமல் இறங்கி கீழே கால்களை வைத்தாள் சட்டென வீட்டு நினைப்பு ஓடியது. இந்நேரம் தங்கை அலாரம் வைத்து எழுந்திருப்பாள். பால்பூத்திற்கு சென்று பால்வாங்கி விட்டு வாசல் தெளித்து கோலமிட்டு காலை டிபன் செய்து விட்டு அவள் பள்ளிக்கு கிளம்பவேண்டும்.

சின்னப்பெண் சுமை தாங்குவளா? என இது பற்றி முன்பேதான் சிந்தித்து தவித்தபோது ஆறுதலாய் தந்தை சொன்ன வார்த்தைகள் அவள் நினைவில் ஓடியது நீ ஒன்றும் கவலைப்படவேண்டாம்.அம்மா இப்போது பாக்கெட் பாக்கெட்டாய் தோசை மாவு வரை விற்கிறார்களே? அதை வைத்து கல்லில் இரண்டு இழுப்பு இழுத்தால் தோசை ரெடி இதுசெல்லாம் எனக்குத் தெரியாதா? நான் பார்த்துக் கொள்ள மாட்டேனா? நீ கவலையை விடு.

தந்தையின் வார்த்தைகளை மனதில் ஓட விட்டு தன்னை ஆறுதல் படுத்திக் கொண்டு மெல்ல எழுந்து நடந்தாள்.

அதேபோல் ஓசையில்லாமல் கதவின் பிடியைத் திறந்து வெளிவந்தபோது கீழே முன்புற வாசல் பக்கம் லைட் வெளிச்சம் தெரிந்தது.

மகேந்திரனுடைய வீடு மேலே மாடியில் இரண்டு அறைகள். கீழே மூன்று அறைகள் கொண்ட விஸ்தாரமான வீடு. மாடியின் ஒரு அறையில் அவர்களுக்கென ஒதுக்கப்பட்டிருக்க எதிர் அறைகளில் மற்றவர்களுக்கென ஒதுக்கப்பட்டிருந்தது.

ரூமை விட்டு வெளிவந்த கவிதா முதலில் குளியலறையில் நுழைந்தாள். முன்புற வாசலில் அன்று முதலே பொறுப்புகளை ஏற்று கோலமிடவேண்டும். என்பது அவள் எண்ணம். நமக்கு முன் மாமியார் எழுந்து விடக்கூடாதே என்ற அவசரத்துடன்தான். வேகவேகமாய் குளித்து பூத்துவாலை டவலால் தலையைச் சுற்றிக் கொண்டு புதுபுஷ்பமாய் முன்புறம் வந்தாள்.

அவள் நினைப்பு சரிதான்.மாமியார் அன்னபூரணி முன்பே எழுந்து வாசல் தெளித்து கோலமிட்டு அன்றைய தினப் பேப்பரை மூக்குக்கண்ணாடியுடன் தனது இடுங்கிய கண்களால் வாசித்தபடி உட்கார்ந்திருந்தாள்.

கவிதாவிற்கு ஒரு கணம் சங்கடமாய் போய்விட்டது எதைச் செய்யலாம் என நினைத்து ஆவலாய் வந்தாளோ அது முதல் நாளே செய்ய முடியாமல் போய் விட்டதே!



அத்தையிடம் சொல்லிவிடலாமா நாளை முதல் இந்த வேலைகளை நான் பார்த்துக் கொள்கிறேன் என்று என நினைத்தவள் அப்படியே அன்ன பூரணியின் பக்கம் போனாள்

அவள் வந்ததை உணர்ந்ததும் அன்பூரணி நிமிர்ந்து வாம்மா என வாய் நிறையப் புன்னகைத்தாள்.

"அத்தை", "நான் நான் தெளித்து கோலம் போடத்தான் அவசரமாய் வந்தேன் அதற்குள் கொஞ்சம் லேட் ஆகிவிட்டது என்றாள்". திக்கித் திணறி

அன்னபூரணி கொண்டிருந்த புன்னகை கொஞ்சமும் மாறாமல் அப்படியே எழுந்து வந்து அவள் கரங்களை இறுகப் பற்றினாள் நீ சின்னப் பெண் இதுவெல்லாம் நான்செய்து கொள்வேன். "நீ கொஞ்சம் தூங்கம்மா"! என்றாள் கனிவுடன்

ஒருகணம் அத்தையின் பேச்சில் மெய் சிலிர்க்கத்தான் செய்தாள் கவிதா ஓர் உலகத்தில் இப்படி எந்த மாமியாராவது சொல்வார்களா? சொந்த மகளாய் அல்லவா நம்மை பாவித்து பேசுகிறார்கள் தாயில்லா சூழ்நிலையில் அன்னையின் அன்பிற்காக வாழ்நாள் முழுவதும் ஏங்கிய அவளுக்க அன்னபூரணியின் வார்த்தைகள் மயிலிறகாய் இதயத்தைவருடியது.

நெகிழ்ச்சியுடன் அத்தையை இறுக கட்டிக் கொண்டாள் அவள். இப்படி ஒரு அன்புச் சூழ்நிலையில் புகுந்த வீட்டில் வாழ அவள் நிஜமாகவே கொடுத்து வைத்திருக்க வேண்டும் தான் என ஆனந்தமாய் மனதுள் நினைத்தாள். அவள்

அத்தை மட்டுமல்ல மகேந்திரனின் தம்பி தங்கைகளும் அவளிடம் அளவு கடந்த அன்பு காட்டினர். பாசத்தை பொழிந்தனர். புதுவீடு சூழ்நிலை எப்படி எப்படி இருக்குமோ அமையுமோ என மனதுள் தவித்தவளுக்கு பெரும் நிம்மதியாய் நெகிழும்படியே அமைந்தது கண்டு பரவசம் கொள்ளத்தான் செய்தாள் கவிதா.

அதன் பின் சமையலறைக்குச் சென்று சிறுசிறு வேலைகளைச் செய்துவிட்டுகாபி தயார் செய்து மகேந்திரனுக்கு கொண்டுபோனாள்.

அப்போதுதான் கட்டிலில் இருந்து எழுந்து சோம்பல் முறித்துக்கொண்டிருந்தான் மகேந்திரன்.


அவளைப் பார்த்ததும் பளீரென வசீகரப் புன்னகை செய்து "ஹாய் குட்மார்னிங்!" என்றதும் அவளுக்கும் அவனது உற்சாகம் தொற்றிக் கொண்டது

"நான் முதன் முதலாக உங்களுக்கு தரும் சூடான காபி", என்றபடி கோப்பையை அவனிடம் நீட்டினாள், கூடவே காபி எப்படி இருக்கிறது

சுவையாகவா இல்லையா என்பதை கண்டிப்பாக சொல்லிவிடவேண்டும். என்றாள். குரலை உயர்த்தியபடி.

மகேந்திரன் அதே சிரிப்புடன் கோப்பையை வாங்கியவன், "இதோ குடித்து விட்டு உடனே பொய் சொல்கிறேன்.." என்றான் குறும்பு பார்வையுடன் கண்களைச் சிமிட்டிய படி

"ஐயோ! நீங்கள் ஒன்றும் பொய் சொல்ல வேண்டாம் உண்மையிலேயே உண்மையாகவே நான் போடும் 'காபி' என அவள் சீரியஸாய் ஆரம்பிக்க அவளை தன் மறுகரத்தினால் இழுத்து பக்கத்தில் உட்கார்த்தி வைத்து தோளோடு இறுக்கியவன், 'பதற்றம் வேண்டாம் கண்மணி இதோ குடித்து விட்டு உண்மையை உண்மையாகவே சொல்கிறேன் போதுமா?' என்றபடி சப்பு கொட்டாத குறையாய் காபியை சுவைத்துக் குடித்தான்.



## 4

கல்யாணம்முடிந்த மூன்றாவது நாளிலே ஹனிமூன் ஏற்பாடு அதுவும் கொடைக்கானல் என்றதும் அவளுக்கு ஜில்லென்று இருந்தது.

அன்று மாலையே சூட்கேஸ் பாக் செய்து கிளம்பி விட்டார்கள். தோழிகளுடன் பலமுறை டூர் சென்றிருந்தாலும் இம்முறை மகேந்திரனுடன் என்றதும் பரவசமாய்தான் இருந்தது.

ஊர் போய் இறங்கியதும் குளிர் தாங்காதவளாய் அவனது கரங்களை இறுக்கியவள் அப்படியே அவனோடு ஒட்டிக் கொள்ளத்தான் செய்தாள்.

அவர்களுக்காக ஏற்கனவே பதிவு செய்யப்பட்டிருந்த காட்டேஜில் தங்கினார்கள். 'ம்ம். சீக்கிரமாய் குளித்துவிட்டு கிளம்பு பார்க்க வேண்டிய இடங்கள் நிறைய இருக்கிறது'. என மகேந்திரன் அவசரப்படுத்தியபோது அவன் கழுத்தை வளைத்துக்கொண்டு,' பேசாமல் ரூமிலேயே இருந்து பேசிக்கொண்டிருக்கலாமா' என்றாள்.

அதற்கு புன்னகைத்த மகேந்திரன் குறும்புப் பார்வையுடன், 'நான் ரெடி ஆனால்பின் இரவு போரடித்துவிடுமேயம்மா!' என்றதும் அதன் அர்த்தம் உணர்ந்து முகம் சிவந்தவள், 'அதற்கில்லை நாம் நிறைய பேசிக் கொண்டிருக்கலாம்' என்றாள் வெட்கத்தோடு.

மகேந்திரன் குனிந்து அவள் காது மடல்களை உரசி அவள் கண்களை நேராய்ப் பார்த்தவன், 'உனக்குத் தெரியுமா கவி? இதுபோன்ற பிக்னிக் ஸ்பாட்டில்தான் கழுத்தைக் கட்டிக் கொண்டு இடுப்பை



வளைத்துக்கொண்டு சுதந்திரமாய் ரோமான்டிக் ஜோடிகள் போல் அலையலாம். யாரும் கண்டு கொள்ள மாட்டார்கள் அப்படி அலைவதில் ஒரு த்ரில்லும் இருக்கும் என்றான்.

அவன் சொன்னதின் முழுஅர்த்தத்தையும் அவனுடன் கொடைக்கானலில் ஒவ்வொரு ரம்மிய பகுதிகளை பார்த்து ரசிக்கும்போதுதான் கவிதாவால் உணரமுடிந்தது. எவ்விதசங்கோஜமுமில்லாமல் ஒருவரையொருவர் அணைத்தபடி செல்லும் எண்ணற்ற ஜோடிகள் பேச்சு சிரிப்பு கும்மாளம் என ஆர்ப்பரிப்புடன் இளமைச்சேஷ்டைகள் செய்தபடி யாரும் யாரையும் சட்டை செய்யவில்லைதான்.

மகேந்திரன் மட்டும்சும்மாவா? ஒவ்வொரு பிக்னிக் ஸ்பாட்டுக்கு செல்லும் வழியிலும் காட்சிகளை ரசித்து அவள் வியப்பாய் விழிக்கும் போதும் யாருக்கும் தெரியாமல் அவன் விரல்கள் அவள் உடம்பில் அங்காங்கே நர்த்தனமாடுவதைக் கூட இனிமையாகத்தான் உணர்ந்தாள்.

மலைப் பிரதேசம் குளிர்வானசீதோஷ்ண நிலை ஜில்லென உடம்பை வருடும் தூய்மையான காற்று கண்களை பரவசப்படுத்தும் பச்சைப் பசேலுகள், என எல்லாமே ரம்மியமாய் அவளை ரசிக்க வைத்தது.

மகேந்திரன் அடிக்கடி காதோரமாய் குனிந்து கொஞ்சல் மொழியில் பேசிச் சிரிக்க பதிலுக்கு அவளும் கொஞ்சத்தான் செய்தாள். குழைந்து பேச்சில் சிரிப்பில் உருகத்தான் செய்தாள்.

ஏரி ஓரமாய் பறந்து சென்ற சிறிய கொக்கு ஒன்றை அவன் காட்டியபோது கூட அதை பெரும் உலக அதிசயமாய்த்தான் பார்த்தாள் அவள்.

பேசினார்கள். பலமணிநேரம் நடந்தார்கள் பசி வயிற்றைக் கிள்ளியதும் பக்கத்து ரெஸ்டாரண்ட் ஒன்றில் உணவருந்திவிட்டு மறுபடியும் சுற்றினார்கள் ஒவ்வொரு நிமிடத்தையும் ஒவ்வொரு விநாடியையும் மகிழ்ச்சியும் சிரிப்புமாய் அனுபவித்து இனிமையை உணர்ந்தார்கள்.

கவிதா திடீரெனத்தான் அவன் பேசும் போது கைகளை ஆட்டியபடி

ஸ்டைலாய் சிரிக்கும்போது, என அவனைக் கூர்ந்து பார்த்தாள். உ ஹாரிட் போன்ற உல்லன் ஸ்வெட்டரில் அவன் மகேந்திரன் கம்பீரமாகவே தெரிந்தான்.

அந்த சுருளான முடிக்கற்றைகளும் பரந்த நெற்றியின் கீழ் மின்னலாய் சுழலும் அந்த கூர்ந்த விழிகளும் அடர்ந்த மீசையின் கீழ் பளிச்சிடும் வசீகரச் சிரிப்பும் திடமான உடற்கட்டுடன் தெரியும் அசாத்திய ஆண்மையும் அவன்

கம்பீரத்தை பறை சாற்ற அப்போதுதான் அவனைப் புதுசாய்ப் பார்ப்பது போலஉற்றுப் பார்த்தாள் அவள்.

சொல்லப்போனால் ஒரு மாதத்திற்கு முன் வரை அவன் யாரோ அவள் யாரோ பெரியவர்கள் பேசிமுடிவெடுத்த கல்யாணம் என்ற பந்தம் தானே அவர்களை இணைத்திருக்கிறது.

அதிலும் அவள் நின்று நிதானித்துஉணருவதற்குள் மின்னல் வேகத்தில் கல்யாண ஏற்பாடுகள் எல்லாம் நடந்து விட்டனவே ஆனால் முதன் முதலில் மகேந்திரனை மணக்கோலத்தில் பார்த்தபோது அப்போதெல்லாம் ஏற்படாத ஒரு வித ஈர்ப்பு ஒருவித பயங்கரமான அன்பு இப்போது அவன் மேல் ஏற்படுவதை உணர்ந்தாள்.

எதனால் இது? என யோசித்தவளுக்க ஓரளவு புரிந்து கொள்ளவும் முடிந்தது. பேசப்பேச பழகப் பழகத்தானே ஒருவரையொருவர் நன்றாக புரிந்து மனங்களால் நெருங்க முடியும் அந்த அப்படி மனதால் நெருக்கமாகும் போதுதானே உண்மையான அன்பை நீரூற்றாய் பிரவாகமெடுத்தது ஓடச் செய்ய முடியும்.

அந்த நீரூற்றான அன்பில்தான் அவன் மகேந்திரன் இப்போது அவள் மனதிற்கு பிடித்த பெரும் அழகனாய் தோன்றுகின்றனா எனவும் வியந்தாள். அப்படி அவள் கவிதா திடீரென பேச்சை நிறுத்தி தனது மை விழிகளால்விழி விரிய ஆசையாய் பார்க்க அவனும் அதிசயத்தான்.

'அட என்ன இது விழிகளைத் திறந்து கொண்டே கனவுலக சாம்ராஜ்யமா?' என அவள் கூந்தலை வருடி அசைத்தபோதுதான் உணர்வுக்கே வந்தாள் அவள்.

முகம் சிவக்க கவிதா பூரித்தாலும் மகேந்திரன் விடாது துளைத்தான்.

'என்ன கனவு அது சொல்லக் கூடாதா?' என்றான்.

'எல்லாம் நம்மைப்பற்றியதுதான்' என்றாள் அவள் முத்துப்பல் சிரிப்போடு

''நம்மைப்பற்றியது என்றால் அது அது போன்ற கனவா?'

அவன் சொல்ல வருவதை உணர்ந்து திடுக்கிட்டு பதறினாள்.

'ஐயோ அதெல்லாம் இல்லை! இது இது இனிமையானது...''

''இனிமையானது என்றால்...?''

''ம்ஹூம்! இனியும் இவனிடம் சொல்லாமல் தப்பிக்கமுடியாது' என்பதை உணர்ந்தவள் அப்படியே தான் நினைத்ததைக் கொட்டினாள்.



இதுவரை ஏற்படாத உணர்வு அன்பு இப்போது நம் மனங்களின் நெருக்கமான சங்கமத்தால் நிகழ ஆரம்பித்து விட்டது.என்றாள்.

சொல்லிவிட்டு முகம் சிவக்க உதட்டை அழுந்தகடித்தபடி அவனைப் பார்தாள் அப்படியே இழுத்து இறுகக் கட்டிக் கொண்டான் இவன்.

பின் அவள் முகம் நிமிர்த்தி நேராய்ப் பார்த்தான்.

''நான் கூட எப்படியோ என்றுதான் நினைத்தேன்... ஆனால் எல்லோர் சொல்வதும் சரியாகத்தான் இருக்கிறது...'' என்றான்.

''என்னது?'' என்றாள் அவள் திடுக்கிட்டு

''நீயே.. பார்.. இந்த ஹனிமூன் ஏற்பாட்டை என் அலுவலக நண்பர்கள் கூறி போய் வா.. என்று சொன்ன போது, இந்த ஹனிமூன் ஏற்பாடு எல்லாம் எதற்கு? நாங்கள் என்ன... சினிமாக்காதலர்களா... கொடைக்கானலில் போய் டூயட் பாடுவதற்கு?'' என்றுதான் அவர்களிடம் சொல்லி கேலி செய்தேன். ஆனால் இங்கு வந்தபின்தான் தெரிகிறது.

''இந்தத் தனிமை யாருடைய தொந்தரவும் இல்லாத சூழல் எல்லாம் நம்மை ரொம்பச் சிந்திக்க வைக்கிறது. ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்ள முடிகிறது. அப்படித்தானே?''

அவன் கேட்க தான் நினைத்ததை அவன் அப்படியே சொல்லிவிட்டான் என்ற சந்தோஷத்தில் வேகமாய் மேலும் கீழும் தலையாட்டினாள் அவள்.

அந்த அவளது தலையாட்டும் அழகை ரசித்துப் பார்த்தவன் அப்படியே அவளை இழுத்து அவள் கன்னங்களில் இதழ்களை பதித்து அவளை மேலும் முகம் சிவக்க வைத்தான். ''இதுபோல் ரொமான்ஸ் செய்யவும் ஹனிமூன் வசதிதானே?'' எனச் சொல்லி சிரிக்கவும் செய்தான்.

பின் அவளை திரும்பவும் உற்றுப் பார்த்துவிட்டு, 'உன்னால் நான் மனதுள் வைத்திருந்த ஒரு பெரிய விஷயம் தவிடு பொடியாகி விட்டது... என்றான்

கவிதா புரியாமல் விழித்தவள் அது என்ன...? என்பது போல் புருவம் உயர்த்தினாள்.

மகேந்திரனின் முகம் மெல்ல மாறியது, தலையை மெதுவாக வெட்டிப் பார்த்தவன், இப்போது வேண்டாம்... அது பற்றி பிறகு சொல்கிறேன்... என்றான் ஒருவித இறுக்கத்தோடு

அவன் திடீர் முக மாற்றத்தையும், கண்டு திகைக்கத்தான் செய்தாள் அவள். அவளை மேலும் யோசிக்க விடாதபடி மறுபடியும் இழுத்து அணைத்துக் கொண்டான் மகேந்திரன்.

அந்த இதமான அணைப்பு இனிமையாய் இருந்தாலும் என்னவோ ஒரு விஷயம் அவளையறியாமல் மனதை நெருடுவதை முதல் முறையாய் உணர்ந்தாள் கவிதா.

❖❖❖



5

கல்யாணமானதும் கவிதா முதன் முறையாய் கவலைப்பட்ட விஷயம், 'அன்பிற்கு...' என்றுதான் சொல்ல வேண்டும். மகேந்திரனின் அன்பு தனக்கு மொத்தமாய் முழுசாய் கிடைக்க வேண்டும் என்றே விரும்பினாள்.

அந்த நினைப்பில்தான் அவள் உள்ளுக்குள் அவளையறியாமல் அந்த திட்டமிடுதல் ஒன்றும் உருவாயிற்று. அதாவது கல்யாணமாக வரப்போகும் கணவனை இந்த அன்பைக் கொண்டு குளிப்பாட்டி திக்குமுக்காட வைத்துவிட வேண்டும் என முன்பே கணக்குப் போட்டு வைத்திருந்தாள் அவள்.

அப்படி அன்பில் குளிப்பாட்டி திணறத் திணற வைத்துவிட்டால் பதிலுக்கு அவனும் அன்பைத்தான் அவளை நோக்கி வீசியாகவேண்டும் ஏனெனில் அன்புக்கான விலை இன்னொரு அன்பு தான்! வேறு எதுவும் அதற்கு ஈடாக முடியாது.

அதனாலே மகேந்திரனிடம் தன் அன்பு முழுவதையும் காட்டி விட்டால் பதிலுக்கு அவனும் தன் அன்பு முழுவதையும் முழுமையாக அவளுக்கு உணர்த்தி விடுவான்.

அப்படி ஒரு மனக்கணக்கு அவள் கொண்டிருந்தால்தான் மகேந்திரன் தன் விருப்பு வெறுப்புகளை அவளிடம் சொல்லாத போதும் அதை தேடிக் கண்டுபிடித்து கவிதா அறிந்தும் கொண்டாள்.

அவனுக்கு வீட்டில் அலுவலக பைல்களை கொண்டு சரி பார்த்துக் கொண்டிருக்கும் போது யாரும் தொந்தரவு செய்வது பிடிக்காது. என்பதை அறிந்ததும் அவன் வேலையாய் இருக்கும்போது அவன் பக்கமே போக மாட்டாள்.

மேலும் அவனுக்கு நேரம் தவறாமை முக்கியம். ஆறு மணிக்கு காபி, எட்டு மணிக்கு டிபன் என்றால் சரியாய் அத்தனை மணிக்கு ரெடியாக இருக்கவேண்டும். அதையறிந்து பம்பரமாய் சுழன்று காலை முதல் இரவு வரை அவனுக்கு பணிவிடைகளை சரியான நேரத்தில் செய்து அவனது பாராட்டுதலையும் பெறுவாள்.



மகேந்திரனுக்கு எப்போதும் சிரித்த முகம்தான். அதனாலே அவனுக்கு சிடுமூஞ்சிக் காரர்களையோ சிரிக்காதவர்களையோ கண்டால் பிடிக்காது எரிச்சலாகவே பார்ப்பான்.

கவிதாவின் பூவிதழ் புன்னகை அழகானது என்றாலும் அதற்காக அவள் எப்போதும் சிரித்தபடியே முகத்தை வைத்திருக்கும் வழக்கம் கிடையாது.

ஆனால் மகேந்திரனுக்காக அவள் தன்னை மாற்றிக் கொண்டாள். அதற்காக கண்ணாடி முன் நின்று வெவ்வேறு போஸில் தனது பூவிதழ் புன்னகையை சிரித்துப் பழகி அழகான சிரிப்பு ஒன்றையும் தேர்ந்தெடுத்துக் கொண்டாள் அவள்.

அந்த சிரிப்பை அப்படியே தன் முகத்தில் வலுக்கட்டாயமாய் ஒட்டவைத்துக்கொண்டு எப்போதும் நடமாட ஆரம்பித்தாள் அவள். மகேந்திரனும் தற்செயலாய் அதை கண்டுபிடித்தவன், 'வாவ்! அழகான அழகோடு சிரிப்பு ஒன்றும் சேர்ந்து கொண்டு கண்கொள்ளா காட்சியாகி விட்டதே... எதனால் இந்த மாற்றம்?' என்றான் ஆச்சரியமாய்.

'நான் உனக்காக மாறிவிட்டேன்...!' எனக் கேலியாய் சொல்லியபடி மறுபடியும் அந்த சிரிப்பைச் சிரித்துக் கொண்டு ஓடினாள் அவள்.

ஓடியவள் அப்படியே சென்றுவிடாது சற்றுத்தள்ளி கதவொன்றின் மறைவுக்குப் போய் நின்று அவன் பார்வையில் படாத வண்ணம் திரும்பிப் பார்த்தாள். அவன் மகேந்திரன் அப்படியே நின்று கொண்டு அவள் சென்ற திசையையே ரசனையோடு பார்த்துக்கொண்டிருப்பது தெரிந்தது.

ஆக.... அவன் அப்படி ரசனையோடு பார்த்துக்கொண்டிருக்கிறான் என்றால்... அது...அது அவள்ரசிக்க ஆரம்பித்துவிட்டான் என்றுதானே அர்த்தம்? அதுதானே அவளுக்கு வேண்டும்? அவன் ஒருவன் தன் மனைவியை, மனைவியின் செயல்களை ரசிக்க ஆரம்பித்துவிட்டானோ.... அன்றே அவன் அவளை புரிந்துகொள்ள ஆரம்பித்துவிட்டான் என தத்துவ ஞானிகள் சொல்வார்களே... அது போல அவள் விஷயத்தில் நடந்துவிட்டதே! அப்படியானால் அவள் ஜெயித்து விட்டாள்தானே!

மகிழ்ச்சி கொண்டவளாய் ரத்தச் சிவப்பேறும் அளவுக்கு உதடுகளை அழுந்தக் கடித்தாள் அவள். துள்ளிக் குதிக்க வேண்டும் போல் கூட இருந்தது.

எல்லா உணர்வுகளையும் அடக்கிக் கொண்டு மறுபடியும் கதவு மறைவிலிருந்து வெளிப்பட்டு மகேந்திரன் முன் போய் நின்றாள். 'என்னைப் பிடித்திருக்கிறதா?' என்றாள் கிளிப்பிள்ளை போன்ற குரலில்.

வேண்டுமென்றுதான் இப்படி ஒரு கேள்வியை அவனிடம் அவள் கேட்டாள் என்று சொல்ல வேண்டும். அதற்கு அவன் எப்படி எவ்வாறு பதில் சொல்ல வேண்டும் என உள்ளுக்குள் ஒரு எதிர்பார்ப்பு வேறும் வைத்திருந்தாள். அவள் எதிர்பார்ப்பு படி நடக்கிறதா, அவன் நடந்து கொள்கிறானா... என அவளுக்கு ஒரு டெஸ்ட் இது!

என்ன ஆச்சரியம்! அவள் நினைத்தது போலவே நடந்தது. அவளது கேள்விக்கு எவ்வித பதிலும் சொல்லாமல் மூச்சுமுட்டுமளவுக்கு அவளை இறுக்கமாய் ஒரு அணைப்பு செய்து விடுவித்தான் மகேந்திரன்.

கூடவே தனது திருவாயைத் திறந்து, 'இதோ பார், இனி இது போன்ற முட்டாள்தனமான கேள்வியைக் கேட்டால் இப்படிப்பட்ட பதில்தான் கிடைக்கும்!.:' என்ற மிரட்டல் வேறு.

அவன் பிடியிலிருந்து விலகி ஜடைகள் ஆட துள்ளிக் குதித்து முகம் சிவக்க உள் ரூமிற்கு ஓடினாள் அவள்.

❖❖❖



## 6

பத்து பதினைந்து நாட்கள் மிகவும் இனிமையாய் கழிந்ததற்கு திருஷ்டிபோல் ஐந்தாவது வாரம் அந்தச் சம்பவம் நடந்தது.

அன்று முதன் முறையாய் மகேந்திரனின் இன்னொரு முகத்தை அவனது கோபத்தை கவிதா சந்திக்க வேண்டியிருந்தது.

அன்றுதான் கல்யாண லீவுமுடிந்து அலுவலக வேலையில் ஜாயின் செய்ய பரபரப்பாய் கிளம்பிக் கொண்டிருந்தான் மகேந்திரன். அவளும் அவன் அவசரத்தை உணர்ந்து அவனுக்கு வேண்டிய ஏற்பாடுகளை விறுவிறுவென செய்து கொண்டிருந்தாள்.

குளித்துவிட்டு வந்தவனுக்கு சூடாக பொங்கல், இட்லி, டிபனை பரிமாறினாள். அவனும் படபடவென சாப்பிட்டுக்கொண்டு அந்த அவசரத்திலும், 'டிபன் பிரமாதம்...' என்றபடி யாரும் பார்க்காத வண்ணம் அவள் இடுப்பை ஒரு தட்டு தட்டிய சில்மிஷத்துடன் தான் அகன்றான்.

முன் ஹாலில் வழக்கம்போல் டிவி முன் உட்கார்ந்திருந்த மாமியார் அன்னபூரணி, அவனைக் கண்டதும், 'ப்பா, மகேந்திரா, உன்னிடம் எத்தனை முறை சொல்லியாகிவிட்டது. இந்த பழைய ஈஸிசேரை பின்னல் மாற்றி ரிப்பேர் செய்யும்படி! நீயும் நான் சொல்வதை காதில் வாங்கிக்கொள்ளவே மாட்டேன்



என்கிறாய் என்னதான் மனதில் நினைத்துக் கொண்டிருக்கிறாய் நீ' என மிரட்டும் குரலில் கேட்ட மகேந்திரனுக்கு ஒரே எரிச்சல்தான்!

ஆனாலும் தன் கோபத்தை தாயாரிடம் காட்ட முடியாது என்பதால் அடக்கிக்கொண்டே, 'ஐயோ அம்மா! கொஞ்சம் பொறுங்கள்... இன்று மாலை அலுவலகம் முடிந்து வந்ததும் முதல் வேலையாய் அதைச் சரி பண்ணி கொடுக்கிறேன். போதுமா?' என்றான்.

ஆனால் அன்னபூரணி பதிலுக்கு சலிக்கவே செய்தாள்.

'என்னவோ... போப்போ...! எப்போதும் இப்படித்தான் செய்கிறேன... என்று சொல்வாய். கடைசியில் மறந்து விடுவாய்...!' என்றாள்.

மகேந்திரன் தனக்குள் குபுக்கென எழுந்த கோபத்தை அடக்குவதற்குள் உள்ளிருந்து அவனது அலுவலக ஃபைல்களை நாலைந்தை தூக்கிக் கொண்டு ஓடிவந்தாள் கவிதா.

'இந்தாருங்கள்... இதை மறந்து விட்டீர்கள்..' என ஃபைல்களை அவன் கைகளில் திணிக்க முயல... கொண்டிருந்த கோபம் மேலும் அதிகமாக தனது கொதிப்பு முழுவதையும் அவளிடம்தான் எரிச்சலாய்க் காட்டினான் அவன்.

'உனக்கு அறிவு என்பது கொஞ்சமாவது இருக்கிறதா? இப்படியா அவ்வளவையும் என் கையில் கொண்டு திணிப்பது... அப்படி என்ன அவசரம் உனக்கு...?' என எரிந்து விழுந்தான் மகேந்திரன்.

ஒருகணம் அவனது அந்த கோபத்தைக் கண்டு ஆடி அப்படியே திடுக்கிட்டுத்தான் போனாள் கவிதா.

அவன் கோபப்பட்டதைவிட... எரிச்சலாய் அவன் பார்த்த பார்வை... வெறுப்பாய் திரும்பிய அவனது முகம்.. மகேந்திரனா இப்படி...? அதுவும் நம்மீதா?

அப்படி என்ன நடந்திருக்கிறது?

அவள் அவனுக்கு உதவி செய்யத்தானே போனாள். அதைப் புரிந்து கொள்ளாமல் அவளிடமே கோபப்பட்டால் எப்படி?

ஆனாலும் அது அநியாயம்! அவள் மீது அவன் கோபம் கொண்டது மிகவும் தவறு!

அவளும் சீறல் கொண்டவளாய் பட்டென் நிமிர்ந்து பார்த்தாள்.

ஆனால் மகேந்திரன் அங்கு நின்றால்தானே? அவன் அந்த ஃபைல்களோடு அங்கிருந்து எப்பவோ அகன்று வெளிப்புறம் சென்று ஷெட்டிலிருந்து பைக்கை எடுத்துக்கொண்டிருந்தான்.

அதற்குள் அங்கு போய் விட்டானா... என அவள் சிறு ஓட்டமாய் முன்புறம் நடந்து வந்தாள்.

என்ன ஆச்சரியம்!... அவள் வந்து நின்ற மறு நிமிடமே பைக்கை ஸ்டார்ட் செய்து கிளம்பியவன் அங்கிருந்தும் சிட்டாய் பறந்து விட்டான்.

ஒரு தலையசைப்பு, ஒரு பை... ஒரு வருகிறேன் என ஒரு வார்த்தை.. ம்ஹூம்! ஒன்றும் சொல்லவில்லை. தன் கோபத்தை ஆக்ஸிலேட்டரை திருக்கி பைக்கை உறுமவிட்டுக்காட்டினான்.

அவள் ஒருத்தி முன்கதவு பக்கமாய் தனக்காக வந்து நிற்பதைக் கவனியாதவன் போலவே திருப்பிய தலையுடன் பைக்கை வெளியேடுத்து வேகமாய் சென்று விட்டான்.

பஸ்ஸை தவறவிட்டபேதை போல் அவன் அப்படிப் போவதையே, தூரமாய் அவன் சிறுபுள்ளியாகி மறையும் வரை பார்த்துக் கொண்டிருந்தவள் கொஞ்ச நேரம் அதிர்ச்சியாய் அப்படியே சிலை போலத்தான் நின்று கொண்டிருந்தாள்.

முதன் முறையாய் மகேந்திரன் அவள் மீது கோபப்பட்டிருக்கிறான்!...

அதுவும் காரணமில்லாமல்... எவ்வித அர்த்தமும் இல்லாமல்!

இரண்டு வாரம் அன்பு மழையில் நனைய வைத்தவன் கடைசியில் ஏதோ ஒரு விஷயத்திற்காக பெரிய பகையாளி போல் முகத்தைத் திருப்பிக் கொண்டு போகிறானே!

எல்லா ஆண்களையும் போல் மகேந்திரனும் ஒரு சராசரி மனிதன்தானே! சமயம் கிடைக்கும் போதெல்லாம் கோபம் என்னும் குதிரையில் ஏறி அவளை அதட்டி உருட்டி மிரட்டலாய் அடிமையாக்கப்பார்க்கும் ஒருவித முயற்சியா இது?

என்னென்னவோ எண்ணங்கள் கவிதாவினுள் ஓடின. ஆனாலும் இதை சும்மாவாக விட்டுவிடக்கூடாது என்பதில் மட்டும் உறுதியைக் கூட்டிக் கொண்டாள்.

வழக்கம் போல் வீட்டு வேலைகளில் ஆழ்ந்தவளின் மன நிலைதொடர்ந்து மூட் அவுட்தான்! அவன் முதன்முறையாய் தன் மீது கோபப்பட்டிருக்கிறான், என்பதை உணர்ந்த போது அவளுக்கு வலிக்கத்தான் செய்தது. ஆனாலும் அவனது கோபம் சிறிதும் நியாயமில்லை என அவள் உள்ளுக்குள் ஒரு குரல் கத்திற்று.

அதனாலேயே அதற்குப் பதிலடி கொடுக்க விரும்பியவளாய் இரவுப் படுக்கையில் திரும்பிப் படுத்து முகத்தை உம்மென்று வைத்துக்கொண்டாள்.



கண்களை திறந்து வைப்பதா அல்லது மூடிக்கொண்டு பாசாங்கு செய்வதா என ஒரு நினைப்பு ஓடியது.

தூங்குவது போல் அவள் இருந்தால் அவன் மகேந்திரன், என்ன இவள் தூங்கிவிட்டாளா? நல்லதாய்ப் போய்விட்டது என அவன் பாட்டுக்கு படுத்துவிடுவானே! ஆனால் அவள் அப்படி விடக்கூடாது. அவனிடம் அவள் கோபத்தை காட்டியாக வேண்டுமே!

அதனால் கவிதா கண்களை நன்கு அகல விரித்துக்கொண்டாள். உதடுகளை அழுத்தி இறுக்கமாய் மூடிக்கொண்டு அந்த கோபமான போஸிலே அவனை எதிர்பார்த்து காத்திருந்தாள்.

அரைமணிநேரத்தில் அவள் நினைத்தபடியே மகேந்திரன் வந்துவிட்டான். ஆனால் அங்கு நடந்ததோ வேறு விறுவிறுவென ரூமில் நுழைந்தவன் எதுவுமே நடவாதது போல் அவள் பக்கத்தில் வந்து உட்கார்ந்தான்.

கட்டிலின் மறுபுறம் சிலிர்த்துக் கொண்டு கிடந்த அவளை ஏதோ நாய்க்குட்டியை இழுப்பது போல் இழுத்து அவன் நெஞ்சில் போட்டுக்கொண்டு மாலை போல்தான் இறுக்கி நெஞ்சோடு சிறைப்படுத்திக்கொண்டான் மகேந்திரன்.

கோழிக்குஞ்சு போல் அவன் நெஞ்சில் பதிந்து கிடந்தவள் கஷ்டப்பட்டுதான் முகம் நிமிர்த்தி அவனது முகத்தைப் பார்த்தாள்.

எவ்வித சலனமுமின்றி அவளைப் பார்த்தவன் அவள் மறைத்துப் பார்ப்பதை உணர்ந்து சட்டென ஒரு வசீகரப் புன்னகையை உதிர விட்டான். 'ஐ... ஆம்... ஸாரி...! நான் அப்படி கோபப்பட்டிருக்கக் கூடாதுதான்...!' என்றபடி சட்டென குனிந்து அவள் நெற்றியில் முத்தமிட்டபடி சொன்னபோது பொசுக்கெனத்தான் உணர்ந்தாள்.

அதுவரை அவள் அவன் மீது கொண்டிருந்த கோபம் இறுமாப்பு எல்லாம் போன இடம் எங்கு என்று தெரியவில்லை!

ஆனாலும் அவள் அப்படி கோபம் கொண்டதை அவனுக்கு கொஞ்சமாவது உணர்த்தியாக வேண்டும் என நினைத்தவள், "உங்களிடம் பொறுமை இல்லை..." என்றாள் இறுகிய குரலோடு.

மகேந்திரனோ அதற்கு, "ம்ம்... இல்லைதான்! நீ சொல்வது உண்மைதான்.. ! என்றபடி அவள் காதோரமாய் கழுத்துப்பக்கம் முகர்ந்தவன், இந்த இனிமையான நீ போட்டிருக்கும் நல்லது வாசனையை முகர்ந்த பிறகு என்னால் பொறுமையாக இருக்க... முடியாததுதான்..." என்று சொல்லியபடி தன் உதடுகளால் அவள் இதழ்களை முத்தமிட உண்மையிலே கவிதாவிற்கு கோபம் வந்துவிட்டது.

அவள் தோள்களை தாங்கிப்பிடித்து தடுத்து நிறுத்தினாள். அவனும் நெஞ்சை நிமிர்த்தி பெரிய பராக்கிரம பாண்டியனை போல்தான் அவளைப் பார்த்தான்.

'எவ்வளவு பெரிய விஷயம்.. நான் சும்மா இருந்துவிட முடியுமா?' என்றாள் கொதிப்பாய்.

'எது....?' என்றான் அவன் சலனமில்லாமல்.

'காலையில் நீங்கள் தேவையில்லாமல் என்னிடம் கோபப்பட்டது...' என்றாள் விஷயத்திற்கு வந்தவளாய்.

'தவறுதான்! அதற்காகத்தானே இப்போது மன்னிப்பும் கேட்டு விட்டேனே?'

'அவள் அதே துடிப்புடன், ஆனால் நடந்தது அவமானம் தானே... என்னை ரொம்பவும் காயப்படுத்திவிட்டீர்களே... இன்று முழுவதும் எனக்கு ஒன்றும் ஓடவில்லை தெரியுமா?'' என்றாள்.

பதிலுக்கு மகேந்திரன் அவளைப் போலவே முகத்தை வைத்துக்கொண்டு, 'பின் எனக்கு மட்டும் என்னவாம்? உன்னிடம் அப்படி கோபித்துக்கொண்டு சென்ற எனக்கு வேலை ஓடவில்லைதான்!' என்றான்.

''நான் நம்ப மாட்டேன் இதை...'' என்றாள் அவள் முகத்தைச்சிலுப்பிய கோபத்துடன்

'நீ நம்புவாய் கவி...' என அவள் கைகளை கோர்த்துப் பிடித்தவன் தாய் அன்னபூரணி காலையில் தன்னை எரிச்சல் படுத்திய விஷயங்களை விவரித்தான். மெல்லிய குரலில் மீண்டும் மன்னிப்பை அவளிடம் கோரினான்.

அவன் நிஜமான வருத்தத்தை உணர்ந்தவள் அப்படியே உள்ளுக்குள் தன்னையறியாமடல் நெகிழத்தான் செய்தாள். இனியும் கோபமாய் சிலிர்க்கும் பாச்சா பலிக்காது என தெரிந்து கொண்டாள்.

மேலும் அவன் கோபப் பட்டான் என்று தானும் அதற்காக அதே தப்பை செய்வது போல் அவனிடம் கோபப்படுவது எந்த விதத்தில் நியாயம் என்பது போல் உணர்ந்தாள்.

சட்டென தெளிந்து மனம் இளகியவளாய் அவனை மன்னித்து அன்பாய் அவன் நெற்றியில் முத்தமிட்டாள் அவள் வெட்கமின்றி!

❖ ❖ ❖





7

கவிதாவிற்கு தினம் தினம் ஏதாவது சுவாரஸ்யமாக செய்யவேண்டும். அவள் மகேந்திரன் ஒவ்வொரு நாளும் தன்னை வியந்து ரசிக்க வேண்டும் என்ற நினைப்பே ஓடியது.

அதனாலே அன்று தங்கஜரிகை பார்டர் சேலையை பெட்டிக்குள் இருந்து எடுத்தாள். அழகு பார்த்தாள். உடம்போடு ஒட்டி அவளை நளினமாக காட்டும் அந்தச் சேலையை அப்படியே கட்டிக்கொண்டு அவன் முன் போய் நின்றாள்

வீட்டில் அதைக் கட்டியபோது தங்கை அவளிடம், 'அக்கா இந்தச் சேலை பிரமாதம். இப்போது நீ பார்த்துக் கொண்டே இருக்கலாம் போல் எவ்வளவுஅழகாய் இருக்கிறாய் தெரியுமா?' என புகழ்ந்து தள்ளியது அவள் காதுகளில் எதிரொலித்தது.

அதைப்போலவே மகேந்திரனும் அவளை அந்தச் சேலையில் பார்த்து கிறங்கவேண்டும். ''என்ன ஒரு அழகு...'' என புகழ வேண்டும்.. என்ற எதிர்பார்ப்பு அவள் மைதீட்டிய கண்களில் மின்னியது.

மனதிலோ அவன் அப்படியே பார்த்துக்கொண்டிருக்கும் வேலையைப் போட்டுவிட்டு ஓடிவந்து அவளை இறுக கட்டிக்கொள்ள வேண்டும் என்ற ஆசையும குதூகலித்தது.

அவள் சேலைக் கடை பொம்மை போல் போஸ் கொடுத்துக்கொண்டு அவன் முன்னால் போய் வெட்கமில்லாமல் நின்றாள் என்றுதான் சொல்லவேண்டும்.

ஆனால்.... என்ன...இது? அவள் ஆசைப்படி எதிர்பார்ப்பு படிதான் எல்லாம் நடந்தது.

காணாததைக் கண்டது போல்அதுவரை பார்த்துக்கொண்டிருந்த அலுவலக கோப்பலை அப்படியே கீழே போட்டு விட்டு ஓடி வந்து ஆசையாய் அவளை கட்டினான் மகேந்திரன். அதுவும் இறுக்கமாய் மூச்சு முட்டும் அளவுக்கு!....

'ஐயோ! என்ன... இது விடுங்கள்!' என திணறித்தான் போனாள் அவள். அவனது இறுக்கமான ஸ்பரிசம் அவளை கிறங்கடித்தாலும் அவன் முத்தாய் காதுகளில் உதிர்த்த வார்த்தைகள் அவளை திக்குமுக்காட வைத்தது.

'இப்படி ஒரு அழகுச்சிலை வந்து அப்சரஸாய் நின்றால் அதைப் பார்த்துக் கொண்டு சும்மா இருக்க நான் என்ன முட்டாளா?' என்றபோது தன்மீது இவ்வளவு அன்பு ஆசை வைத்திருக்கிறானா என அவள் சொக்கித்தான் போனாள்.

'உன் அழகிற்கு இந்த அடிமையின் பரிசு..' என பின் மென்மையாய் அவளது செவ்விதழ்களில் முத்தமிட்டு விட்டு விலகினான் அவன். ஒரேடியாய் பூரித்துப் போனாள் அவள்.

அழகைப் புகழ்ந்து இறுக அணைத்தது என அத்தோடு நில்லாமல் போனசாக முத்தம் வேறு கொடுத்து விட்டானே!

'நீ இந்தச் சேலையில் ரொம்பவும் அழகாக இருக்கிறாய்...' என மறுபடியும் சொல்லி இதழ் விரிந்த பளீர் சிரிப்புடன் அவளை முழுவதுமாய் விடுவித்து அதே குறும்புடன் செல்லமாய் அவள் பின்புறத்தை ஒரு தட்டு தட்டியபடி அவன் வேலைகளைக் கவனிக்கச் செல்ல கிறுகிறுத்துதான் போனாள் அவள்.

இது..... இதைத்தானே... அவள் எதிர்பார்த்தாள்!

கல்லூரி நாட்களில் சகமாணவியரோடு எதிர்கால கணவன் பற்றிய கனவு காணும் போது இப்படி இப்படியெல்லாம் எனக்கு வருகிறவர் இருப்பார். இருக்க வேண்டும் என்று வரையறுத்து பட்டியல் கூட போட்டாளே?

அவள் அப்படி நினைத்தபடி.... அப்படியே மகேந்திரன் அமைந்து விட்டானே!

அவளுக்கு மகேந்திரனிடம் பிடித்த இன்னொரு விஷயமும் உண்டு. என்னதான் திடீரென வந்து அணைத்தாலும், சட்டென இதழ்களை பதித்தாலும் ஓரிரு நிமிடங்களிலே அவளை விடுவித்து விலகி விடுவான். அவனது எந்த செய்கையும் அவளை எரிச்சல் படுத்திக் கூடாதாம்!

அதாவது அவன் ஆசையாய்ச் செய்தாலும் அவளுக்கும் உணர்வுகள் உண்டு. எந்த நிலையிலும் அவளை சங்கடப்படுத்திவிடக்கூடாது என்பது போல்! அது போன்ற சூழ்நிலையில் அவளும் விலகியவனை இழுத்து ஒரு அணைப்பு செய்து தன் அன்பை தெரிவிப்பாள்.

அப்படிச் செய்யும்போது அவளுக்கே குறுகுறுப்பாய்த்தான் இருக்கும். இதைத்தான் கதைகளில் சினிமாப் படங்களில் ரொமான்ஸ் என்று சொல்வார்களோ.... என்று வியப்பாள்.



மகேந்திரனுக்கு எப்படித் தெரியுமோ.... என்ன மாயம் செய்து கண்டுபிடித்தானோ... அவள் நினைக்கிற விரும்புகிற விஷயங்களை எல்லாம் அவள் கேட்காமலே நிறைவேற்றி வைத்தான்.

அவளுக்கு கதைப்புத்தகங்கள் படிக்கும் ஆர்வத்தை அறிந்து மறுவாரமே வீட்டுப்பக்கம் இருந்த பொது நூலகம் ஒன்றில் அவளை அழைத்துப்போய் உறுப்பினராக்கினான்.

தினம் அலுவலகம் முடிந்து வீடு வந்ததும் பைக்கில் ஷாப்பிங் அல்லது காலாற ஒரு வாக்கிங் என கூட்டிக்கொண்டு போவதை வழக்கமாக்கிக்கொண்டான்.

அப்படியொரு தனிமை நேரங்களில் இனிமையாய் அவனுடன் இருப்பது அவளுக்கு பேரின்பம் போல் இருந்தது.

சில சமயம் பக்கத்து சிறுவர் பூங்காவில் விளையாடும் வாண்டுகளின் சேஷ்டைகளை ரஸித்தபடி சிமிண்ட் பெஞ்சில் அமர்ந்து இருவரும் மணிக்கணக்காய் பேசுவார்கள்.

பழைய கதைகள் சிறு வயது விஷயங்கள்... ரூபகங்கள் என மகேந்திரன் ஒவ்வொன்றாய்ச் சொல்ல கவிதா தலைசாய்த்து ஆர்வம் பொங்க கேட்பாள். அவன் சொல்லும் சாதாரண விஷயம் கூட பெரும சுவாரஸ்ம் உள்ளது போல்தான் அவளுக்குத் தோன்றும் தன்னை மறந்து அப்போது வியந்து போவாள் அவள்.



8

மறுவாரம் முதல் நாள் அவள்தன் வீட்டிற்குச் சென்றுவர ஆசைப்பட உடனே அனுமதி அளித்தான் மகேந்திரன். அதனாலே காலை முதல் இன்பமும் இனம் புரியா மகிழ்ச்சியும் குதூகலமாய் எழுந்து அவளை நிறைத்தது.

அவளது துள்ளிக் குதிக்காத சந்தோஷத்தைப் பார்த்த மகேந்திரன், 'அடடா! பிறந்த வீட்டிற்கு செல்ல வேண்டும் என்றால் பெண்களுக்கு வருகிற குஷியே தனி...!' என்றான் கேலிக்குரலில்

கவிதாவும் புருவம் உயர்த்திப் பார்த்தவள், பின் இருக்காதா? இவ்வளவு நாட்கள் கிட்டத்தட்ட இருபது வருடங்கள் வாழ்ந்த இடத்தை கழுத்தில் ஒரு கயிற்றைக் கட்டி நீங்கள் மூன்று முடிச்சு போட்டதும் உதறி விட்டு போல் வருகிறோமே... அந்தத் தேடல் எங்களுக்கு இருக்காதா? என்றாள்.

மகேந்திரன் புதிலுக்கு போலியாய் கை கூப்பியவன், 'அட... ரொம்பவும் அலுத்துக்கறியே..! இதோ பாரம்மா, இப்படித் தாலி கட்டியதும் பெண் கணவனின் வேஷ்டியைப் பிடித்துக்கொண்டு புகுந்த வீட்டுக்கு வந்துவிடவேண்டும்... ஏற்கனவே இருக்கும் சம்பிரதாய சட்டம்தான்!' என்றான் சிரிப்போடு.

அவளும் புதிலுக்கு. 'இருக்கட்டும் அந்த சட்டத்தை நீங்கள் மீற வேண்டியதுதான்!' என்றாள்.

மகேந்திரன் நாற்காலியில் சாய்வாக அமர்ந்திருந்தவன் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டான்.

'நான் தயார். சட்டத்தை மீற நான் தயார் என்றவன், அட இப்போது ஒன்றும் கெட்டுப் போகவில்லை. நான் என் பிறந்தகத்தை விட்டு விட்டு புகுந்த வீடு புகுவது போல் உன்வீட்டோடு மாப்பிள்ளையாய் ஆகத் தயார்தான்.... என்றவன் மீண்டும் அதே கும்மாளிக்கும் குரலில், என்ன... பின் நீ மட்டுமில்லாமல் உன் வீட்டு ஆட்களும் இந்த மாப்பிள்ளையைத் தாங்கித் தாங்கி உபசரிக்க வேண்டியதாய் இருக்கும்...' எனச் சொல்லி முடிக்கவும் செய்தான்.

அதற்கு கவிதா பெரும் சிரிப்புதான் சிரித்தாள்.

'அட... அப்படி ஒரு நினைப்பு வேறு ஐயா மனதில் ஓடுகிறதா? வீட்டோடு மாப்பிள்ளை என்றால் மரியாதை கிடைக்கும் என்று வேறு நினைப்பா? கழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆனது போல் கடைசியல் விளக்குமாறுதான் மிஞ்சும்..' என்போது அவனும் சேர்ந்து சிரித்தான்.

பின் இருவரும் காலை எட்டு மணிக்கே கிளம்பி விட்டனர். காலை உணவு மதிய சாப்பாடு என இரண்டுமே கவிதா வீட்டில் விருந்தாய் சாப்பிட ஏற்பாடு ஆகியிருந்தது.

அரைமணி நேர பயணத்தில் இருவரும் வீட்டை அடைந்து விட்டனர். வாசலில் அவர்கள் வருவதையறிந்து வரவேற்கத் தயாராய் நின்று கொண்டிருந்தார் தந்தை உலகநாதர்.

தந்தையைக் கண்டதும் பாசம் பொங்க 'அப்பா...' என்றபடி அவரது கைகளை பிடித்துக்கொண்டாள் கவிதா. தங்கை பாமாவும் அக்காவைப் பார்த்து ஓடிவந்து கழுத்தோடு இறுக்கி கட்டிக் கொண்டாள். அவர்களது பாசப்பொழிவை புன்னகையுடன் பார்த்தபடி உள்ளே நுழைந்தான் மகேந்திரன்.

மகேந்திரன் முதன் முறையாய் அப்போதுதான் தன் வீட்டுக்கு வந்திருப்பதால் கவிதா ஆவலாகி வீட்டின் ஒவ்வொரு பகுதியையும் அவனை அழைத்துக் கொண்டு போய் காண்பித்தாள்.



மூன்று தட்டுகளைக் கொண்ட சிறு வீடு மாடிப்படி வழியாக ஏறிச் சென்றால் சின்னமாடி அதில் சிறிதாய் இரண்டு அறைகள். ஒன்று கவிதாவிற்கு. இன்னொன்று தங்கை பாமாவிற்கு.

எல்லாவற்றையும் மகேந்திரனுக்கு காட்டி அவனை அவளது அறையில் உள்ள சிறிய மரக்கட்டிலில் உட்கார்த்தி வைத்து தனது கல்யாணத்திற்கு முன்பான வாழ்க்கையை விளக்க ஆரம்பித்தாள்.

'இதுதான் எனது உலகம். தினம் வேலை முடிந்து வந்து இங்கு படுத்தால் களைப்பே தெரியாது. மணிக்கணக்காய் கண்களை மூடிக்கொண்டு அப்படியே கிடப்பேன்...' என்று சொல்ல... சொல்ல... அவன் ஆவலானான். 'அப்படியா? என்றபடி அந்தக் கட்டிலில் ஓரிரு நிமிடம் கண்களை மூடி படுத்துப் பார்த்துவிட்டு நிமிர்ந்தான். பின் புன்னகையுடன், நீ சொல்வது உண்மைதான் பெரிய ஏஸி ரூமில் கிடைக்காத சுகம் இங்கு கிடைக்கிறதே..!' என்றான்.

அத்தோடு கவிதா விடவில்லை அவள் சேர்த்து வைத்த புத்தக அலமாரி, அவள் பாட்டு கேட்கும் சிறிய டிரான்சிஸ்டர், அவவள் தினம் தினம் நடப்பதை எழுதிவைக்கும் டயரி குறிப்புகள் என ஒவ்வொன்றாய் காட்ட புருவம் உயர்த்தி ஆச்சரியத்துடன் பார்த்தான் அவன்....

பின் காலை உணவு ரெடியாக இருப்பதை உணர்ந்து இருவரும் கீழே இறங்கி சாப்பிட வந்தனர். பாமா தான் ஓடியாடி பரிமாறினாள்.

பாமா பழைய அம்மாவின் சேலை ஒன்றைக் கட்டிக்கொண்டு பெரிய மனுஷிபோல் அவள் அலைந்து வேலை பார்ப்பதை கவிதா ரொம்பவும் ரசித்தாள்.

சாப்பிட்டு விட்டு முன் ரூமில் அமர்ந்து மகேந்திரனும் உலகநாதரும் பேச ஆரம்பித்தனர். நடுத்தட்டில் பாமாவுடன் அமர்ந்து வீட்டுக்கதைகளை கேட்க ஆரம்பித்தாள் கவிதா.

நேரம் போவது தெரியாமல்தான் எல்லோரும் பேசிக் கொண்டிருந்தனர். மதியம் மணி இரண்டை கடிகாரம் காட்டிய போதுதான் உணவுக்கு வந்தார்கள். பின் மதிய உணவை முடித்துவிட்டு மறுபடியும் பேச்சைத் தொடர்ந்தார்கள்.

மாலை ஐந்து மணிக்கு பார்த்து பேசிய திருப்தியுடன் கிளம்பிவிட்டாள் கவிதா. கண்ணெல்லாம் கலங்கியவளாய் மனமுருக அவர்களிடம் விடைபெற்று வீடு நோக்கி புறப்பட்டாள் அவள்.



## 9

மகேந்திரன் விஷயத்தில் என்னதான் தினம் தினம் சந்தோஷமாய்ப் போய்க்கொண்டிருந்தாலும் ஏதோ ஒன்று மனதை நெருடுவதாய் உணரத்தான் செய்தாள் கவிதா.

அவன் மகேந்திரன் 'மாலு... மாலுக்கண்ணா' என்று ஒரு முறை திடீரென கொஞ்ச திடுகக்கிட்டுத்தான் போனாள் 'மாலுவா....? என்ன சொல்கிறீர்கள்?' என அவள் வினவியபோது அவன் சிரித்தபடியே, அது வேறு ஒன்றுமில்லை. எனக்கு மிகவும் பிடித்த பெயர். அதனால் அப்படி உன்னைக் கொஞ்சி மகிழ்கிறேன்... என்று சொல்லிவிட்டான்.

அதே போல் தூக்கத்திலும் அடிக்கடி 'மாலு... மாலினி' என அவன் உச்சரித்தபோது அவள் திடுக்கிடவே செய்தாள்... 'மாலு... என்று இவன் குறிப்பிடுவது... மாலினியைத்தானா? யார் இந்த மாலினி...? என முதன் முறையாய் அவள் குழம்பலானாள்.

சரி மகேந்திரனிடமே இதுபற்றிக் கேட்டு விடுவோம் என்று பார்த்தால் அவன் கோபப்பட்டு வெகுண்டு விட்டால்.... என்ற பயமும் அவளைக் கேட்கவிடாமல் தடுத்தது. சரி... விட்டு விடுவோம் என்று பார்த்தாலும் ஒரு பெண்ணின் பெயரை அல்லவா மகேந்திரன் உச்சரிக்கிறான் என்பது குடைச்சலைக் கொடுத்தது.

போதாக்குறைக்கு சில சமயங்களில் மகேந்திரனின் செயல்கள் விசித்திரமாக இருப்பதையும் முதன் முறையாய் அன்று உணர்ந்தாள் அவள்.

அவள் வழக்கமாக தலைமுடியை படிய வாரி க்ளிப்பிங் செய்வது வழக்கம். அவள் ஒப்பனை செய்யும் போது முன் வந்து உட்கார்ந்த மகேந்திரன். இப்படி வேண்டாம் முன்றுமாய் நடு வகிடு எடுத்துச் சீவுகிறாயா கவி... நன்றாய் இருக்கும்... என்றபோது அவனுக்காக தனக்குப் பிடித்தமான ஹேர்ஸ்டைலை மாற்றி நடுவகிடுக்கு மாறினாள்.

போதாதென்று மகேந்திரன் உடை விஷயங்களிலும் மூக்கை நுழைத்தான். மஞ்சள், சிவப்பு, வெண்மை என மூன்று நிறங்களையே தேர்ந்தெடுக்கச் சொல்லி அந்தக் கலர் உடைகளையே அடிக்கடி அணியச் சொன்னான். அடிக்கடி சுரிதார் அணியப் போனவளை தடுத்து, சேலையே உனக்கு நன்றாக இருக்கும். அதையே கட்டிக் கொள்ளேன்....! என மாற்றினான். சரி அவன் விருப்பம் என அவள் சுடிதார் அணிவதையே மறந்துவிட்டாள்.



சில சமயம் அவன் சொன்ன நிறங்களில் சேலையைக் கட்டிக்கொண்டு அலங்காரமாய் அவன் முன்வந்து நிற்கும்போது அவன் அப்படியும் இப்படியுமாக முகத்தை வெட்டி அவளை ஆச்சரியமாய்ப் பார்ப்பான். நம் முடியாதவன்போல் வியப்பான். அட.... அப்படியே அவளைப் போலவே இருக்கிறாயே... நீ...! என அவன் ஒருமுறை முணு முணுக்க அவள் அதிர்ந்துதான் போனாள்.

சில நாட்களாகவே இவ்விஷயம் அவள் மனதைக் குடைந்தாலும் எப்படி இதை கேட்பது எனவே தவித்தாள் கவிதா. தான் எதையாவது தவறாக கேட்டு அவனை சங்கடப்படுத்திவிடக்கூடாது என்ற கவலையும் அவளுள் இருந்தது.

அன்றும் அதனாலே பலவிதமான யோசனைகள் பலவாறாய் மனதுள் ஓட ரொம்பவும் குழம்பித்தான் போயிருந்தாள்.

அப்படியே சிலை போல் பிரமை பிடித்த நிலையில் அவள் எவ்வளவு நேரம் உட்கார்ந்திருந்தாள் என்று தெரியாது. தற்செயலாய் தன் தலையை இதமாய் ஒரு கரம் பற்றி மென்மையாய் நீவி விடுவது போல் உணர்ந்து கண்இமைகளை அவசரமாய் பிரித்தாள்.

வசீகரப் புன்னகையுடன் அவளையே பார்த்தபடி மகேந்திரன் நின்று கொண்டிருந்தான்.

மகேந்திரனைப் பார்த்ததும் தான் பயம் நீங்கியவள் போல் குழப்பமெல்லாம் விலகி மூச்சு வந்தது அவளுக்கு. அப்படியே தாவி அவனைக் கட்டியவள் சிறு குழந்தைப்போல் அவன் நெஞ்சில் ஒண்டிக்கொண்டாள்.

மகேந்திரனும் அவள் நிலை புரிந்தவன் போல் முதலில் ஒன்றும் கேட்கவில்லை பரிவாய் அவளை தலையை வாஞ்சையுடன் வருடி எவ்வித சலனமுமில்லாமல் கொஞ்ச நேரம் அவளை அப்படியே வைத்துக் கொண்டான்.

கவிதாவுக்கு ஒரே ஆச்சரியம்! என்ன... ஏது....? என கொஞ்சமும் கூட பதறாமல் அவள் ஓடிக் கொண்டதும் அவளை ஆறுதல் படுத்துவது போல் இதமாக அவளை அணைத்து பரிவாக அவளை வருடி ஆசுவாசப்படுத்திக் கொண்டு இருக்கிறானே?

அவ்வளவு தூரம் அவன் அவளை புரிந்து வைத்திருக்கிறானா? இருவருக்குள் அதற்குள் அந்த சொல்லாமலே புரிந்து கொள்ளும் அண்டர்ஸ்டாண்டிங் வந்து விட்டதா?

ஒரு கணம் அப்படி எழுந்த உணர்வே அவளை அந்த நிமிட கவலைகளை துயரங்களை எல்லாம் தள்ளி உவகை கொள்ள வைத்தது. எதையெதையோ நினைத்து எதற்காக குழம்பவேண்டும்? நல்ல தாம்பத்யத்திற்கு இருவருக்கும் இடையே இந்த ஒரே எண்ண அலைவரிசைதானே வேண்டும்? அது வந்து விட்டால் ஒருவரையொருவர் புரிந்து மகிழ்ச்சி துள்ளி விளையாட ஆரம்பித்துவிடுமே! குபீரென மனதுள் தோன்றிய சந்தோஷ ஊற்றில் அப்படியே நிமிர்ந்து அவன் கண்களைச் சந்தித்தாள்.

அவன் கொண்டிருந்த வசீகரப் புன்னகையை பெரிதாக்கியவாறு, என்ன... என்பதை வாயால் பெரிதாக்கியவாறு, என்ன... என்பதை வாயால் கேளாமல் புருவம் உயர்த்தியே வினவினான்.

அவனிடம் தன் மனதில் எழுந்த விஷயங்களை சொல்லிவிடலாம் எனத்தான் நினைத்தாள். ஆனால்.. பின் இந்த சந்தோஷ மனநிலை மாறிவிடுமே! அவனும் அவளைப்போல குழம்ப ஆரம்பித்து விடக்கூடாதே!

அதனாலே மீண்டும் அவன் முகத்தை நேருக்கு நேராய் பார்த்தவள், அதெல்லாம் ஒன்றுமில்லை. சும்மா கொஞ்சம் டயர்டாக இருந்தது. அதனால்தான் தலையைப்பிடித்துக் கொண்டு உட்கார்ந்து விட்டேன்... என்றாள்.

அவன் ஒன்றும் பேசாது குனிந்து அவள் நெற்றியில் மென்மையாக தனது உதடுகளை பதித்துவிட்டு, ஏதோ ஒரு விஷயம் உன்னை பாதித்திருக்கிறது என்பது புரிகிறது கண்மணி. ஆனால் அவசரமில்லை உனக்கு எப்போது தோணுகிறதோ அப்போது என்னிடம் சொன்னால் போதும்... என்றான் கொண்டிருந்த புன்முறுவலை பெரிதாக்கியபடி.

அவள் அவன் பேச்சைக் கேட்டு மறுபடியும் உள்ளுக்குள் துள்ளினாள்.

அவள் சரியாகத்தான் நினைத்திருக்கிறாள். அந்த அன்பான கணவன் மனைவிக்கு இருக்கவேண்டிய அந்த அண்டர்ஸ்டாண்டிங் அவர்களுக்குள் மிகச் சரியாகவே வந்துவிட்டது. மேட் ஃபார் ஈச் அதர், பெஸ்ட் கப்பிள், கிப்ட் ஒன்ஸ்... என என்ன வேண்டுமானாலும் சொல்லிக்கொள்ளலாமே!

அவள் மறுபடியும் மை விழிகளை அகல விரித்தபடி சிந்தனைக்குள் சென்றுவிட, கொஞ்ச விநாடியில் தன் உதடுகள் முழுக்க ஈரம் படர்வதை உணர்ந்துதான் உணர்வுக்கு வந்தாள்.



அவளின் ரோஜா உதடுகளில் தனது இதழ்களைப் பதித்துக்கொண்டிருந்தான் அவன்.

ஐயோ! போதும்! கதவு வேறு திறந்து கிடக்கிறது.... பட்டப்பகலில் இது என்ன கூத்து?

அவள் பதறித்தான் விலகினாள்.

அவன் அவளை விடுவித்தாலும் குறும்புச் சிரிப்பு சிரித்தவன், நான் இப்படி செய்வதற்கு ஒரு காரணமிருக்கிறது கண்மணி... என்றான்.

காரணமா? அப்படி என்ன காரணம் ஸார் இதற்குச் சொல்லப் போகிறீர்கள்? என்றாள் அவள் புருவங்களை உயர்த்தி பார்த்தபடி

அவன் பார்வையை குறும்பாக்கியபடி, நீயே பார். இந்த அறையுள் நான் நுழையும்போது எப்படியிருந்தாய்? ஏதோ ஒரு பிரச்சினையை மனதில் போட்டு குழப்பிக்கொண்டு மனம் முழுக்க கவலைகளோடு... ஆனால் இப்போது உன் மனநிலை.. மாறி... மாறி.. விட்டதுதானே...? என்ன நான் சொல்வது நிஜமா... இல்லையா?

அவன் கேட்டதற்கு சட்டென தலையசைத்தவள் திகைப்பாகவே யோசித்தாள். அவன் சொல்வது உண்மைதானே? அவனது அந்த சுந்தரிபிடி மன்மத குறும்பில் அவள் ஒருகணம் தனது கவலைகள் எல்லாவற்றையும் மறந்து விட்டாள்தானே?

கண்கள் விரித்து திகைத்தவளின் அழகான தலையை செல்லமாய் தட்டினான் அவன்.

அட... இப்போது புரிகிறதா? இனி இது போன்று கவலை, துயரம் தோன்றும் நேரங்களில் எல்லாம் நேரிடையாக நயாவிடம் ஓடிவந்து உதட்டில் தேவையான ஒன்றை வாங்கிக்கொண்டுபோய் விடவேண்டும். புரிகிறதா?

வேண்டுமென்றே போலியாய் மிரட்டும் தொனியில் கேட்டு அவன் கைகளை உயர்த்தி மிரட்ட அவள் பவ்யமாய் தலையாட்டினாள்.

கூடவே, ஓ.கே. பாஸ்! என பெரியசலாம் ஒன்றும் அவனுக்குப் போட்டாள்.

மறுநாள் மகேந்திரன் அவளை சினிமாவுக்கு அழைத்துச் செல்வதாய் காலையிலேயே சொல்லிச் சென்றிருந்தான். சினிமா அவளுக்கு அவ்வளவாக

பிடிக்காது என்றாலும் மகேந்திரனுடன் அமர்ந்து பார்க்கப்போகிறோம் என்பதே ஒருவித குஷியை அவளுள் கிளப்பியிருந்தது.

ஆனால் மாலை மகேந்திரன் அழைக்கும்போது அக்கா யாமினியும் விஷயம் அறிந்தவள், நானும் வருகிறேனே.... என தொற்றிக்கொண்டாள்.

மகேந்திரன் ஓரளவு இதில் எரிச்சல் ஆனாலும் திரும்பி கவிதாவின் பக்கமே பார்த்தான். அவனது பார்வையை உணர்ந்தவள், வரட்டும்! அதனால் என்ன? என்பது போல் கண்களாலே பதில் சொன்னாள்.

உடனே பைக்கை வைத்துவிட்டு ஆட்டோ ஒன்றைப் பிடித்தான் மகேந்திரன்.

மூவரும் ஏறிக்கொண்டார்கள்.

தியேட்டரில் கூட்டம் மொய்த்தது என்றாலும் மகேந்திரன் தெரிந்தவர் ஒருவர்மூலம் டிக்கெட்டுகளை எடுத்து வந்து விட்டான். தியேட்டரின் உள்ளே நுழைந்து இருக்கையில் அமரும்போது யாமினி இங்கிதம் இல்லாமல்தான் அதைச் செய்தாள்.

எட்டிப்பிடிப்பது போல் மகேந்திரன் பக்கத்தில் போய் டக்கென உட்கார்ந்துகொண்டாள். கவிதாவோ அதை பெரிதாய் எடுத்துக்கொள்ளாமல் அடுத்த இருக்கையில் அமர்ந்தாள்.

ஆனால் மகேந்திரன்தான் எரிச்சலாகிவிட்டான். அவனுக்கு கவிதாதன் பக்கம் உட்கார வேண்டும். அவளுடன் நெருக்கமாய் அமர்ந்து படத்தைப் பார்க்க வேண்டும் என ஆசை. இந்த அக்காவிற்கு, புது மணத்தம்பதிகள் இதுபோன்ற ஆசைகள் இருக்கும்... என்ற சின்ன விஷயம் கூட தெரியாமல் போயிற்றே... என யாமினியை முறைத்து விட்டு அசூயையாய் முகத்தை திருப்பிக்கொண்டான்.

அவனது மனநிலையை கவிதா அறிந்தவள் உள்ளுக்குள் அவன் கோபத்தை ரசித்தாலும், கொஞ்சம் பொறுமை காட்டுங்கள். என்ன இருந்தாலும் உங்கள் அக்காதானே...! என பார்வையினாலே கண்களைச்சிமிட்டி சமாதானம் செய்யப்பார்த்தாள். ஆனால் மகேந்திரன் படம் முடியும் வரை முகத்தை உர்ரென்றுதான் வைத்துக்கொண்டிருந்தான். கவிதான் யாமினி அவன் கோபத்தை அறிந்து முகம் வாடி விடக் கூடாது என்பதற்காக வலியப் போய் இடையிடையே அவனிடம் பேசிக்கொண்டிருந்தாள்.



ஒருவாறு படம் முடிந்து மூவரும் வீட்டுக்குத் திரும்பினர். அன்றிரவு படுக்கவந்தவளின் இடையை வளைத்த மகேந்திரன், என்ன நீ...? தியேட்டரில் என் கோபத்திற்கு பதிலாய் அடிக்கடி கண்சிமிட்டிக்கொண்டே இருந்தாயே? என்றான்.

அது... வேறு ஒன்றுமில்லை. உங்கள் அக்கா யாமினி உங்கள் பக்கம் உட்கார விரும்பி இருக்கிறார்கள். அவர்கள் மனம் நோகக்கூடாது அல்லவா...? அதான் கண்களைச் சிமிட்டி உங்களை சமாதானம் செய்தேன்...! என்றாள் இதழ் முழுவதும் பரவும் புன்னகையோடு.

மகேந்திரன் பதிலுக்கு, ஓஹோ அப்படியா...? என போலியாய் வியப்புக்காட்டி அவளும் கண்களை விரித்தவன், ஆனால் நீ அப்படிச் செய்ததால் எந்தன் அன்பு மனம் நொந்து விட்டதே...! என்றான்

நொந்த மனதுக்கு தக்க மருந்து தரப்படும்... என்றபடி அவள் மீண்டும் கண்களைச் சிமிட்டிக் காட்டினாள்.

மகேந்திரனும் விடவில்லை.

ம்ம்... சீக்கிரமாக மருந்தைக் கொடு... நொந்த மனது ரொம்பவும் வலிக்கிறது... என்றான்.

கவிதா அவன் பக்கத்திடம் வந்து கைகளை மாலையாய் அவன் கழுத்தில் கோர்த்து மென்மையாய் அவன் நெற்றியில் தன் இதழ்களைப் பதித்தாள்.

பின் அவனை நோக்கி குனிந்து அதே கண்சிமிட்டலுடன், மருந்து வேலை செய்ய ஆரம்பித்து விட்டதா? காயம் ஆறிவிட்டதா? என ஆரம்பித்தவள் பின் சட்டென குரலைஅவனைப்போலவே மிரட்டும் தொனியில் மாற்றி, இனி மனதில் எப்போதெல்லாம் காயம் படுகிறதோ அப்போதெல்லாம் என்னிடம் இந்த மருந்தைக் கேட்டு வாங்கிக்கொள்ளவேண்டும். என்ன புரிகிறதா? என அதே போல் அவனைப் போலவே பேசிக்காட்டவும் அடக்கமுடியாமல் சிரித்தான் அவன்.

அந்தச் சிரிப்பில் தானும் கலந்து கொண்டு அந்த இடத்தையே கலகலப்பாக்கினாள் கவிதா.



## 10

அன்று இரவும் தூக்கத்தில் மகேந்திரன் முனங்க... காதுகளைத் தீட்டி உன்னிப்பாய்க் கேட்டாள் கவிதா.

மகேந்திரன், மாலினி... மாலினி.... என்று தான் தெளிவான வார்த்தைகளை உச்சரித்து எதையோ பிதற்றிக் கொண்டிருந்தான்

மாலினி..?

மறுபடியும் அதேபெயர்! அதே உச்சரிப்பு! யாரது? யாராக இருக்கும்?

நினைத்து மறுபடியும் குழம்பித்தான் போனாள் கவிதா.

அந்தக் குழப்பத்தில் அன்றைய தூக்கம் வராமல் போனது

இரவு முழுவதும் கொட்டகொட்டத்தான் விழித்திருந்தாள்.

மறுநாள் பொறுக்கமுடியாமல் முதல் வேலையாய் மகேந்திரனிடம் சென்று மாலினி பற்றி நேரிடையாகவே கேட்க அதற்கு மகேந்திரனோ, மாலினி என் காதலி.. என்றான்.

மாலினி என் காதலி.. என்று சர்வ சாதாரணமாய்ச் சொன்னான் அவன். அவன் அழுத்தமாய் உச்சரித்த விதமும், காதலி என பாசப் பரிவாய் விளித்த விதமும் அவளை அதிர்வோடு திடுக்கிடச் செய்தது.

அப்படியே கண்கொட்டாமல் அவனைப் பார்த்தாள். இந்தக் காதல் கன்றாவி வேறு.. என அவள் எரிச்சல்பட அவன் அதை உணராமல் கதை போல் சொல்ல ஆரம்பித்தான்.

அது.. ஒரு பெரிய கதை விரிவாகச் சொல்கிறேன்... என்று தொடங்கியவன், நான் எம்.பி.ஏ. படிப்பு முடிந்ததும் முதன் முதலாய் மேனேஜ்மெண்ட் ட்ரெய்னியாக ஆறு மாதங்கள் ஒரு கம்பெனியில் வேலை பார்த்தேன். அந்தக் கம்பெனியின் பெயர் ஆர்.கே.கார்மெண்ட்ஸ் அந்த நிறுவனத்தின் முதலாளிதான் இந்த மாலினி...

அவன் நிறுத்த.... அவசரமாய் குறுக்கிட்டு, அப்படியானால் முதலாளியையா காதலித்தீர்கள்? என்றாள் சற்று கேலி பொங்க



பதிலுக்கு அவன் சீரியஸாய், காதலித்தேன் இல்லை காதலித்தோம் என்றுதான் சொல்ல வேண்டும் என வார்த்தைகளைத் திருத்த அவளுள் எரிச்சல் கூடவே செய்தது.

அப்படியானால்... என்னை கண்டதும் காதலா? என்றாள் மீண்டும் அதே கேலி செய்யும் கோபத்தில்

அதற்கு மறுப்பு செய்யாமல் பலமாய் தலையாட்டினான் மகேந்திரன்

கரெக்டாகச் சொல்லிவிட்டாள். அதேதான் இருவரும் ஒருவரையொருவர் பார்த்த அந்த முதல் சந்திப்பில்... முதல் கணத்தில்... எங்களுக்குள் என்னவோ ஆகிவிட்டது. பயங்கர ஈர்ப்பு ஏற்பட்டு மனதை பறிகொடுத்து விட்டோம். காதல் என்றால் அப்படியொரு காதல்...!

அவன் சொல்ல கவிதா கைகளைத் தட்டியவள், சரிதான்... ஷேக்ஸ்பியரின் ரோமியோ ஜூலியட் நாடகம் தான் ஞாபகம் வருகிறது. அதில்தான் ரோமியோவைப் பார்த்த முதல் சந்திப்பிலே ஜூலியட் மனதை பறி கொடுப்பாள். பெரிய மன்மதக்குஞ்சாய் ரோமியோவும் பறி கொடுப்பான். இருவருக்கும் காதல் ஸ்டார்ட் ஆகிவிடும். அப்படித்தானா உங்கள் கதையும்...? இகழ்ச்சியும் கேலியுமாய் அவள் கேட்க.... வெட்கப்படாமல் சிரித்தவன் நீ சொல்வது சரி நான் உன்னைப் போலத்தான் ஷேக்ஸ்பியரின் நாடகத்தை நினைத்து. நாம் என்ன ரோமியோ ஜூலியட்டா கண்டதும் காதல் வர.. என திகைத்துதான் யோசித்தேன். ஆனால் நிஜத்தில் உண்மையாய் கண்டதும் காதல் வந்தது. இருவருக்கும் மெய்யாய் அன்பு வந்தது....

வரும்... வரும்... கொள்ளிக்கட்டைதான் வரும்... ஆத்திரத்தோடு அவள் உதடுகளுக்குள் அரிசிப் பற்களை கடித்து அரைத்ததை உணராமல் அவன் தொடர்ந்து கொண்டிருந்தான்.

இந்தக் காதல் ஏற்பட்டதில் இன்னொரு சுவாரஸ்யமான விஷயத்தையும் கண்டுபிடித்தேன். அது...

சொல்லுங்கள். அப்படி மாலினியுடன் காதல் ஆராய்ச்சி செய்து கண்டுபிடித்த விஷயம் என்னவோ...? மறுபடியும் நடுக்குடன் கேலி செய்தாள் அவள்,

அவன் அதை கொஞ்சமும் உணராமல்அவளை சீரியஸாகப் பார்த்தவன். நீ திருக்குறள் படித்திருக்கிறாய்தானே...? என்றான்.

ம்ம்.. படித்திருக்கிறேன். ஆனால் அதில் உங்கள் காதல் பற்றி வள்ளுவர் ஏதும் குறள் இயற்றியதாய் ஞாபகம் இல்லையே...!

அவள் வேண்டுமென்றே சீண்டலாய்ப் பேசி பழி தீர்க்க அவனோ நெற்றியைத் தேய்த்தபடி மேலும் சுவாரஸ்யமானான்.

அது.. சரிதான் வள்ளுவர் மாலினி பற்றி சொல்லவில்லை. காதல் பார்வையை அவள் என்னைப் பார்த்த ஆழமான ஒருவித பார்வையை, ஒரு இரண்டு வரிகளில் என்னமாய் அழகாக சொல்லியிருக்கிறார் தெரியுமா?

கவிதாவினுள் பரிகாசம் கூடியது. அட... வள்ளுவர் உங்களுக்காக அந்தக் காலத்திலேயே குறள் பாடியிருக்கிறாரா? பேஷ்.. பேஷ்.. தெய்வீகக் காதல்தான் போங்கள்.!

அவள் பரிகாசத்தைப் பாராட்டாய் எண்ணிக் கொண்டவன் அந்தக் குறள் வரிகளைச் சொல்கிறேன். அப்போதுதான் அப்படி நான் சொல்வது எவ்வளவு அர்த்தமான உண்மை என்பது புரியும்... என்றபடி குறளைச் சொல்ல ஆரம்பித்தான்.

நோக்கினாள் நோக்கெதிர் நோக்குதல் தாக்கணங்கு

தானைக்கொண் டன்னது உடைத்து.

அதாவது, தலைவன் மையல் கொண்டு பார்த்ததும், தலைவியும் காதல் கொண்டு அப்படியொரு பார்வையைத் திரும்பப் பார்க்கிறாளாம். அந்தப் பார்வை ஆயிரமாயிரம் படைகள் சேனையோடு வந்து தாக்குவது போல் இருக்கிறதாம். தலைவியின் அந்தப் பார்வைக்கு அப்படி ஒரு மகத்தான சக்தியாம்!

அப்படியொரு பார்வை அந்தத் தலைவி மாலினி உங்களைப் பார்த்தாளாக்கும். நீங்களும் மன்மதக் குஞ்சாய் மயங்கிவிட்டீர்களாக்கும்...! கவிதா தாள முடியாத எரிச்சலுடன் ஏற்றி இறக்கி கிண்டலாய்ச் சொல்ல.. அதற்கு தலையாட்டி நிஜமாய் ஆமோதித்தான் மகேந்திரன்

ஆமாம்... உண்மையில் அதுதான் நடந்தது. அந்த மாலினி உன்னைப்போல் சற்றுப் பெரிதான விழிகள். நீ மை வைத்திருப்பது போல்தான் அவளும் கண்களில் அழகாய் மை வைத்திருப்பாள். சொல்லப்போனால உன்னைப் போலவே அச்சு அசலாய் இருப்பாள்.



மேற்கொண்டு ஏதோ சொல்லப் போக, அதற்குமேல் மாலினி புராணம் கேட்கப் பிடிக்காதவளாய் கைகளை உயர்த்தினாள்.

புரிகிறது... உங்கள்இருவருக்கும் காதல் வந்தாயிற்று. நீங்கள் காதலித்தீர்கள். அதற்குப் பின் என்ன நடந்தது. அதைச் சொல்லுங்கள்...

அதற்கும் பலமாய் தலையாட்டினான் மகேந்திரன்.

சொல்கிறேன். மாலினி நானும் பார்த்து சந்தித்த ஒரு வாரத்திலே காதல் வந்துவிட்டது. இருவரும் அலுவலகத்தை மறந்து பார்க், பீச், ஹோட்டல் என சுற்றினோம். என்றான் ஏதோ ஞாபகம் வந்தவனாய், ஏன்... இந்த ரெஸ்டாரண்டிற்கு கூட. இப்போது உன்னுடன் வந்ததுபோல் அவளை எத்தனை முறை வந்திருப்பேன் தெரியுமா? எனவும் கவிதாவின் முகத்திலும் தாங்க முடியாத எரிச்சல் பரவியது.

அருவருப்பாய் முகத்தை வெட்டியவள், மேலே சொல்லுங்கள்... என்றாள் பற்களைக் கடித்தபடி..

ம்ம்.. அப்படியெல்லாம் வளர்ந்த எங்களது காதல் ஒருநாள் மாலினி தந்தைக்கு தெரிந்துபோயிற்று. விடுவாரா அவர்? எந்த தந்தையாவது தனது கோடீஸ்வர மகள் தன்னிடம் வேலை பார்ப்பவனை காதலித்தால் ஒத்துக் கொள்வாரா? அவரும் அப்படித்தான். பெரிதாய் குதித்து தாண்டவமாடி விட்டார்..

அப்படியா... அப்புறம் என்ன நடந்தது?

அப்புறம்... என்ன? மாலினி என்னிடம் ஓடி வந்தாள். தந்தையின் பேச்சை தன்னால் மீற முடியாது என்று சொன்னாள். மேலும்...

காதலை மறந்துவிடு.. என்று சொல்லியிருப்பாளே? கவிதா ஆர்வமாய் கேட்க பலமாய் தலையை வெட்டி மறுத்தான் மகேந்திரன்

அப்படி இல்லை.. கவிதா!

பின் எப்படி?

அதற்குப் பதில் இன்னொரு அருமையான வழி சொன்னாள்...

அது.. என்ன வழியோ...?

கவிதாவின் கேலியை உணர்ந்து கொள்ளாமல் சீரியஸாகவே பேசினான் மகேந்திரன்.

மாலினியின் தந்தை எங்களது காதலை மறுப்பதற்கு முக்கிய காரணம் ஸ்டேட்டஸ் தானாம். நானும் அவர்களைப் போல் பெரும் பணக்காரனாய் கோடீஸ்வரனாய் இருந்தால் பிரச்சினை இல்லையாம் அதனால்..

உங்களையும் பணம் சம்பாதித்து கோடீஸ்வரனாக மாறசொல்லியிருப்பாளே...?

ஆமாம்.. சரியாகச் சொன்னாய்! கவிதா எப்படி இது உனக்குத் தெரியும்? என்றான் ஆச்சரியம் பொங்கியவனாய்.

கவிதா அசட்டையாய் தோள்களை குலுக்கினாள்.

ஹ்ஹூம்... இது என்ன பெரிய விஷயமா? எல்லா பணக்கார வீட்டுப் பெண்களும் காதலித்துவிட்டு கடைசியில் சொல்கிற வழக்கமான டயலாக்தானே...

ஆனால் மாலினி அப்படிப்பட்டவள் இல்லை...

அப்படியா?

எனக்காக வருத்தப்பட்டாள். வேதனையோடு கண்ணீர் விட்டாள்.

மகேந்திரன் சொன்னதற்கு. த்ஸோ... த்ஸோ... என போலியாய் உச்சுக் கொட்டியவள், அந்தக் கண்ணீரை நீங்கள் துடைத்து விட்டீர்கள்தான்? என்றாள் கிண்டல் பொங்க.

அப்போதுதான் அவள் கேலியாய் தன்னை எள்ளிநகையாடுவதை முதன்முறையாய் அவன் உணர்ந்தான்.

கவிதா, நான் என் காதல் கதையை சீரியஸாக சொல்லி வருகிறேன். நீ என்னவென்றால்.. பொய்க் கோபத்துடன் முறைக்க, அடக்க முடியாத சிரிப்புடன் நானும் சீரியஸாகத்தான் கேட்டுக்கொண்டு வருகிறேன்... என போலியாய் பவ்யம் காட்டி மீண்டும் சிரித்தாள் கவிதா.

அதற்குப் பின் என்ன நடந்தது தெரியுமா?

பெரிய புதிர் போல் அவன் கேட்க, அவள் மறுபடியும் அடங்காத சிரிப்பு சிரித்தாள்.

அத்தோடு நீங்கள் மாலினி பிரிந்து விட்டீர்கள். உங்கள் காதல் செத்துவிட்டது. அப்படித்தானே?



அவள் சொன்னதற்கு வேகத்துடன் சோகமாய் தலையசைத்தான் மகேந்திரன்...



11

மகேந்திரன் சொன்ன விஷயங்கள் முழுவதையும் கேட்டு கவிதா அதிர்ந்துதான் போயிருந்தாள்.

அவளால் அவன் சொன்னவைகளை கொஞ்சமும் நம்பமுடியவில்லைதான்!

மாலினி முன்னால் காதலியாம். உருக உருக காதலித்தானாம். கடைசியில் ஏமாற்றிவிட்டுப்போய் விட்டாளாம்!

எல்லாவற்றையும் விட முக்கியமான விஷயம் அவள் மாலினி கவிதா போலவே அச்சு அசலா இருப்பாளாம். உலகத்தில் ஏழுபேர் ஒரே உருவ ஒற்றுமையில் இருப்பது போல் இது ஒரு அதிசயமாம்!

அவள் அச்சு அசலாய் அவன் காதலித்த மாலினியைப் போல் இருப்பதாலே தரகர் அவள் ஃபோட்டாவைக் காட்டியதும் பெண் பிடித்திருக்கிறது என உடனே கவிதாவை கட்டிக் கொள்ள சம்மதம் சொன்னானாம்.

மேலும் கவிதாவை மாலினி உருவாகவே பார்த்து ரசிக்கத்தான் அவளைப் உடைகளை, அவள் அழகாக அணியும் மஞ்சள், சிவப்பு, வெண்மைக்கலர்களில் சேலைகளை அவளை உடுத்தச் சொல்லி ரசித்தானாம்!

மகேந்திரன் சொல்லச் சொல்ல அவளுக்கு பற்றிக் கொண்டுதான் வந்தது.

அந்த மாலினி நினைப்பிலேயே.. மாலினி உருவிலேயே.. தன்னை... பார்த்திருக்கிறான். ரசித்திருக்கிறான்.

ஆக... அவன் ரசித்து ஒவ்வொருநேரமும் மகிழ்ந்தது தன்னையல்ல... அந்த மாலினியைத்தான்!

நினைக்கவே வேப்பங்காயை கடித்தது போல் தான் கசப்பாய் உணர்ந்தான்.

என்ன ஒரு அநியாயம்! யாரையோ காதலித்து அவள் விட்டுப் போயும் அவளை மறக்காமல் அவள் நினைப்பிலேயே.. இருந்துகொண்டு தன்னுடன் கட்டிப்பிடித்து சல்லாபித்துக் கொண்டு அதுவும்.... மாலினியையாகவே அவளை நினைத்துக்கொண்டு....

கொதிப்பு அடங்காதவளாய் அன்றிரவே படுக்க வந்தவனிடம் சண்டைக்குப் போனாள் அவள்.

அவள் துடித்துச் சிவந்த முகத்தையும் மூக்கு நுனி கோபத்தையும் அசராமல் ரசித்துச் சிரித்தான் அவன்

கூல்டவுன் பேபி.. கூல் டவுன்... என்றான்

போங்

இந்தச் சிரிப்பெல்லாம் வேண்டாம். விஷயத்திற்கு வாருங்கள்.... என்றாள் அவள் கறாராய்.

சரி... விஷயத்திற்கு வருகிறேன். என்ன விஷயம்?

அதான் உங்கள் முன்னால் காதலி மாலினி.. அவளை இன்னும் நீங்க மறக்கவில்லைதானே?

இல்லையே.. மறந்து விட்டேனே...! என்றான் விட்டேந்தியான குரலில்.

இல்லை.. நீங்கள் மறக்கவில்லை... என்றாள் அவள் உறுதியான குரலில்

மகேந்திரன் புருவங்களை உயர்த்தினான்.

எதை வைத்து அப்படிச் சொல்கிறாய்?

பின் அவள் இல்லையென்று தெரிந்தபிறகும் அவள் நினைப்பிலேயே என்னைப் பார்த்து அவள் மாதிரியே.. என்னை அலங்காரங்களை உடைகளை அணியச் செய்து நீங்கள்... ரசித்து... என்னை... என்னையல்லவே...! அந்த மாலினியைத்தானே?

மூச்சு வாங்க கேட்டவளை ஆழமாய் உற்றுப் பார்த்தான் மகேந்திரன் பின் அமைதியாக, உன் நினைப்பு உன் கோபம் நியாயமானதுதான்... என்றான்.

அவன் பதிலுக்கு சட்டென அமைதியாகிவிட்டதைக் கண்டு அவள் திகைக்கவே செய்தாள்.



மகேந்திரன் நிதானமாகவே அவளுக்கு விளக்கினான்.

கவிதா, நீ நினைப்பது சரிதான். ஆனால் அதிலும் ஒரு லாஜிக் இருக்கிறது. அதைகவனித்துப் பார். என் நிலை உனக்குத் தெளிவாய் புரியும்..

அது என்ன லாஜிக்? விரிவாய்ச் சொல்லுங்கள்..! என்றாள் அவள் உஷ்ணம் குறையாமலேயே

அதாவது கவிதா, நான் முதலில் மாலினியை காதலித்தது உண்மை அவள் என்னைத்தூக்கி எறிந்த... உடன் நானும் நிஜமாகவே அவளை மனதில் இருந்து தூக்கி எறிந்து விட்டேன் ஆனால் நீ அவள் சாயலில் எனக்கு மனைவியாய் வந்ததும் ஏமாற்ற என்மனதிற்கு ஆறுதல் அளிப்பது போல் உன்னை மாலினி போல் அலங்கரித்து ஆசைதீர பார்த்தேன். உன் மீது அன்பைப் பொழிந்தேன். ஆனால் அதற்காக நீ மாலினி அல்ல. என் மனைவி கவிதா... எனத் தெரிந்து கொள்ளாத அளவுக்கு நான் ஒன்றும் முட்டாள் அல்ல. புரிகிறதா?

அவன் சொல்லிமுடிக்க நம்ப முடியாத அதிர்ச்சியுடன் அவனையே விழிகள் விரிய பார்த்தாள் கவிதா.

மகேந்திரன் மெல்ல நெருங்கி அவள் தோள்களைப் பற்றி கைகளை அழுந்த வைத்தான்.

இதோ பார் கவிதா, உன் நிலைமை எனக்குப் புரிகிறது. ஆனால் என்னைப் பார். எதையும் நான் உன்னிடம் மறைத்தேனா? இல்லையே... நடந்த உண்மைகளை அப்படியே உன்னிடம் ஒப்புவித்து விட்டேனே...? அதில் இருந்தே நான் சொல்வது உண்மை சத்தியமான நிஜம் என நீ புரிந்து கொள்ளலாம்....

அவள் இன்னமும் பேசாமல் இருக்க சிறைப்படுத்திய அவளது கைகளை உயர்த்தி மென்மையாக முத்தமிட்டான் அவன். கவிதாவும் அவனை புரிந்து கொண்டதுபோல் தனது கரங்களை இறுக அவனோடு பிணைத்தாள். மகேந்திரன் கூடவே, கவிதா, உனக்கு ஏதும் இப்படி காதல் அனுபவம் உண்டா? என்றான் சாதாரணமாய்.

இல்லை... இல்லை... என்றாள் கவிதா அவசரக்குரலில்.

அவள் அப்படி அவசர அவசரமாய் பதில் சொன்னவிதமே அவள் எதையோ மறைக்கிறாளோ? என்ற சந்தேகத்தை எழும்ப வைப்பது போல் இருந்தது.



12

ஒரு வாரம் ஓடியது

எவ்வித பிரச்சினையுமில்லாமல் மறுபடியும் இருவரும் சந்தோஷம் பொங்க பழைய வாழ்க்கைக்கு திரும்பியாயிற்று.

தினம் ஏதாவது கேலி, கிண்டல், சிறுசிறு காதல் ஊடல் விளையாட்டு போல் பொழுது கழிந்தது.

அப்படித்தான் அன்று கவிதா, நம் குடும்ப வாழ்க்கையை மேலும் சுவாரஸ்யமாக்க ஒரு வழி தோன்றுகிறது... என்றாள்.

என்ன வழி? என்றான் மகேந்திரன்.

தனது சிறிய செவ்விதழ்கள் இரண்டையும் அழுத்தமாய் மூடிக்காட்டினாள் கவிதா.

மகேந்திரன் புரியாமல் அவளையே உற்றுப் பார்த்தான்.

புரியவில்லை? மௌனம்! மௌனவிரதம்! என்றபடி சிரித்தாள் அவள்

மௌன விரதமா?

ம்ம்... வாரத்திற்கு ஒருமுறை இருவரும் மௌனவிரதம் இருப்போமா? அதாவது வாயால் பேசாமல் கைகளால் ஜாடைகளால் மட்டும் பேச வேண்டும் அப்படி மாதத்திற்கு ஒரு நாள் இருப்போம். நிச்சயம் சுவாரஸ்யமாய் இருக்கும்... என அவள் சொல்லச்சொல்ல மகேந்திரனின் முகமும் விரிந்தபடி சுவாரஸ்யத்திற்குப் போனது. நானும் அதுபற்றி கேள்விப் பட்டிருக்கிறேன். மௌனம் மிகச் சிறந்த ஒரு விஷயம் மனதை அழகாய் தூய்மைப்படுத்தி சிந்திக்கவைக்கும்... என்று...



அப்படியானால் நாம் இந்த வாரம் முதல் மௌனவிரதத்தை தொடங்கி இருப்போமா? என்றாள் அவள் கண்களைச் சிமிட்டி உற்சாகம் பொங்க.

அவனும் ஆர்வமானான்.

ம்ம்.. தாராளமாய்! ஆனால்.. பார்... நாம் மௌன விரதம் இருப்பது ஓ.கே. மற்றவர்களிடம் வீட்டில் அலுவலகத்தில் பேசாமல் இருக்க வாய்ப்பில்லையே...!

அவன் திகைக்க அதற்கும் வழி சொன்னாள் அவள்.

மௌனவிரதம் நம் இருவருக்கும் மட்டும்தான். மற்றவர்களிடம் வேறு வழியில்லை. நாம் பேசித்தான் ஆகவேண்டும்...

அவள் சொல்ல அவன் சம்மதமாய் தலையசைத்தான்.

இருவரும் சேர்ந்து அப்படிமௌன விரதம் இருப்பதற்காக ஒரு நாளையும் தேர்ந்தெடுத்தார்கள். அது வியாழக்கிழமை!

அன்று முழுவதும் காலை முதல் மறுநாள் விடியும் வரை பேசிக்கொள்ளக்கூடாது. வெறும் கை அசைப்புதான். ஜாடைகள்தான்!

இருவரும் சுவாரஸ்யத்தோடு அந்த வார வியாழக்கிழமையை எதிர்பார்த்தார்கள். வியாழக்கிழமை வந்ததும் காலைமுதலே தங்களது மௌன விரதத்தையும் தொடங்கினர்.

முதலில் இருவருக்கும் அப்படி பேசாமல் அப்படி சைகை செய்வது பெரும் விளையாட்டாய் சிறுபிள்ளைத்தனமாய்த் தோன்றியது.

அவன் கைகளாலே விளக்கி அசைத்து ஒவ்வொன்றையும் கேட்க அதற்கு புரிந்து கொண்டு சிரித்தபடியே ஜாடைகளால் பதில் சொன்னாள் அவள்.

மகேந்திரன் இடையிடையே குறும்புத்தனமாய் கைகளைக் கோர்த்து உதடுகளைக் காட்டி அணைக்கும்படியும் முத்தமிடும்படியும் ஜாடை செய்ய அவன் காதைப் பிடித்து இறுகக் கிள்ளத்தான் செய்தாள் அவள் பேசக்கூடாதே தவிர.. இருவரும் சிரிக்கலாம் அல்லவா?


இருவரும் ஒவ்வொன்றை ஜாடை சொல்லி உணர்த்த முயன்று முடியாமல் பெரிதாய் விழுந்து விழுந்து சிரிக்க...

அன்றைய பொழுது முழுவதும் அப்படிக் கேலிச் சைகையிலும் பொங்கும் சிரிப்புமாகவே அவர்களுக்கு கழிந்தது

மறுநாள் ஹோட்டலுக்கு செல்வோம்... என மகேந்திரன் நகரின் பெரிய உணவகம் ஒன்றுக்கு அழைத்துப்போனான்.

விதவிதமான உணவு அயிட்டங்களை ஆர்டர் செய்தார்கள் பேச்சும் சிரிப்புமாய் ருசித்து சாப்பிட்டார்கள்.

அப்போதுதான் தன்னை மறந்த சந்தோஷத்தில் சிரிப்பில் இருந்த கவிதா தன்னை யாரோ ரொம்ப நேரமாக உறுத்துப்பார்ப்பதை உணர்ந்து திரும்பி மறுபுறம் பார்த்தாள். பார்த்தவளின் கண்கள் அதிர்ச்சியில் ஸ்டில் அடித்தது போல் அப்படியே நின்றுவிட்டது. எதிரே... இருக்கை ஒன்றில் அவன்!சேகர்! அவள் எங்கு சென்றாலும் அவளை தேடிப் பிடித்து அவளை பழிவாங்கப் போவதாய் சவால்விட்டசேகர்!



## 13

மறுவாரம் மகேந்திரன் அன்று அலுவலகம் முடிந்து திரும்பி வந்ததும் வராததுமாக அவளை தனியே இழுத்துக் கொண்டு சென்று வெடிக்கத்தான் செய்தான்.

கவிதாவுக்கு என்ன பதில் சொல்வதென்றுதான் தெரியவில்லை. ஒரு கணம் திகைத்துப் போய்த்தான் நின்று விட்டாள்.

மகேந்திரனிடம் இருந்து அப்படி ஒரு வார்த்தைகள் வரும் என அவள் கொஞ்சமும் நினைக்கவில்லை.

உன்மேல் எவ்வளவு நம்பிக்கை வைத்திருந்தேன். எல்லாவற்றையும் பாழ்படுத்தி விட்டாயே. அப்படியானால் நீ இவ்வளவு நாள் இங்கு காட்டியது எல்லாம் வேஷம் தானா?

சொல்லியபடி அவள் அவன் தோளில் வைத்திருந்த கையை வெறுப்பாய் தட்டிவிட அப்போதுதான் விபரீதமாய் எதையோ உணர்ந்தாள்.

என்னாயிற்று உங்களுக்கு? ஏன் இப்படியெல்லாம் பேசுகிறீர்கள்?

அவள் கேட்க கைகளை உயர்த்தி பேச்சை நிறுத்தும்படி சைகை காட்டியவன், கேள்வி கேட்க வேண்டியவன் நான். நான்தான்.... என் கேள்விகளுக்கெல்லாம் முதலில் பதில் சொல்... என்றான் கோபமாய்.

கேளுங்கள்.. என்றாள் அவள் ஒருவித பயக்குரலில்.

சேகரைத் தெரியுமா? என்றான் அவன்.



சேகரா... யாரது? என்றாள் புரியாதவளாய்.

உன் கல்லூரி நாட்களில் உன்னுடன் படித்தவன்...

அவள் மென்று விழுங்கினாள்.

ம்ம்... ஞாபகமிருக்கிறது..

அவனுக்கும் உனக்கும் என்ன தொடர்பு?

தொடர்பா...? என்ன சொல்கிறீர்கள்?

அதவன் குரலை உயர்த்த அவனும் பதிலுக்குக் கத்தினான்

சும்மாவாக நடிக்காதே.. எல்லாம் எனக்குத் தெரியும்! கேட்பதற்கு மட்டும் பதில் சொல்.. என்றான் அதிகாரமாய்.

என்ன தெரியும் உங்களுக்கு?

சேகர் உன்னுடைய காதலன். நீ அவனை காதலித்திருக்கிறாய். இந்த விஷயத்தை என்னிடம் சொல்லாமல் மறைத்திருக்கிறாய்.

அவள் திகைப்பில் வாய் பொத்தினாள்.

அபாண்டம் இது!

நீ இவ்வளவு நாள் சொல்லாதது... என்னிடம் மறைத்தது... அதான் அபாண்டம்!

நான் சொல்வது உண்மை... சத்தியமான உண்மை!

அப்படியானால்... என்ன இது? என்றபடி மகேந்திரன் கையிலிருந்து அதை உயர்த்திப் பிடித்தான். அது ஒரு கடிதம்!

அவள் பக்கம் நீட்டினான்.

படித்துப் பார்! புரியும்...

நடுங்கும் விரல்களோடு அதை வாங்கிப் பிரித்தாள். என்ன இது?

அவன் சொன்னது சரிதான்.

அது சேகர் அவளுக்கு எழுதிய கடிதம்தான். அதுவும் அவளைக் காதலி போல ரசனையாக பாவித்து...

அவன் திகைக்க, லெட்டரை சத்தமாகப் படி. என்றான்.

அவள் தயங்கினாள்.

ம்ம்... படி..

அவன் மிரட்டலுக்குப் பயந்தவள் கடகடவென அதை வாசித்தாள்.

அன்பே கவிதா, எப்படி இருக்கிறாய்? நாம் பிரிந்து பல வருடங்களாகி விட்டாலும் எல்லாமே நேற்று நடந்தது போல்தான் இருக்கிறது. கல்லூரி நாட்களில் நாம் காதலித்தது, கல்லூரி முழுக்க நம்மை சிறந்த காதல் புறாக்கள் என கிண்டல் செய்து கொண்டாடியது நாமும் இனிய காதலர்களாய் பார்க், பீச், சினிமா எனச் சுற்றியது... எல்லாமே இனிமையாய் இன்னமும் என் மனதில் இருக்கிறது. அவையெல்லாம் மறக்கக் கூடிய... விஷயங்களா? சூழ்நிலை காரணமாக நான் என் பூர்வீகத் தொழிலை கவனிக்க வெளிநாடு செல்ல வேண்டியிருந்ததும் அதனாலே நம்முடைய காதல் தோல்வியுற்று நிறைவேறாமல் போனதும் உனக்குத் தெரியும்.

மேலும், இப்போது நீ கண்டிப்பாய் வேறு யாரையாவது மணந்து கொண்டு சந்தோஷமாய் இருப்பாய் என எனக்குத் தெரியும். ஆனால் உனக்குத் தெரியுமா? நான் இன்னும் பிரம்மச்சாரியாகவே உன் நினைவோடு வாழப்போகிறேன். நான் தற்போது இருப்பதும் இனி இருக்கப் போவதும் வெளிநாட்டில்தான். தற்செயலாய் சென்னைக்கு இரண்டு நாள் பயணமாய் வந்தேன். உன்னை நேரில் வந்து சந்திக்க ஆசைதான். ஆனால் தொழில் அவசரத்தில் நேரமின்மையால் சந்திக்காமலே திரும்பச் செல்கிறேன். இருந்தாலும் என் எண்ணத்தை எல்லாம் நீ புரிந்து கொள்ள வேண்டும் என்றே ஒரு லெட்டரில் இப்படி எழுதி உன் முகவரிக்கு அனுப்பியிருக்கிறேன். நீ உன் கணவரோடு சந்தோஷமாக வாழ்க்கை நடத்த வேண்டும் என்பதே என் ஆசை. எனக்கு உனது நினைவுகள் மட்டும் போதும். நீ ஆசையாய் என்னை பலமுறை அணைத்ததும் நீ அன்பாய் பலமுறை எனக்குக் கொடுத்த முத்தங்களும் என்றும் என் நினைவில் இருக்கும். அந்த நினைப்பிலேயே நான் என் வாழ்நாளை ஓட்டி விடுவேன். அதனால் எனக்காக நீ கவலைப்படக் கூடாது. உன் வாழ்க்கையை சந்தோஷமாக வைத்துக்கொள். அதுதான் எனக்கு வேண்டும். எனது ஆசையும் கூட! பை!

இப்படிக்கு உனது

அன்பிற்குரிய

சேகர்

-என எழுதப்பட்டிருக்க... முழுவதையும் வாசித்து முடித்தாள் கவிதா.

அவளுக்கு அதிர்ச்சியில் ஒரு கணம் வார்த்தைகளே வரவில்லை.

அப்படியே நா உலர்ந்து உதடுகள் ஒட்டிக் கொண்டது.



பாவி! என்னவெல்லாம் எழுதி இருக்கிறான்! ஏதோ... அவளைக் காதலித்தது போல் கல்லூரி முழுக்க ஜோடியாய் சுற்றியதுபோல், அவனுக்காக அவள் ஏங்கியதுபோல், என்னவெல்லாம் கதைவிட்டு எழுதி இருக்கிறான்!

இந்தக் கன்றாவியில் அவள் அவனை ஆசையாய் அணைத்தாளாம்! முத்தமிட்டாளாம். அதுவும் பலமுறையாம்! அந்த நினைப்பிலேயே அவனும் வாழ்ந்து விடுவானாம்!

சண்டாளன்! நடந்தது எல்லாவற்றையும் மறைத்து விட்டானே!

கல்லூரியில் அவள் பின்னால் வந்து ரோமியோத்தொல்லை கொடுத்ததற்காக அவளிடம் செருப்படிகள் வாங்கிக் கட்டிக் கொண்டான் அல்லவா இந்த சேகர்?

பின் காதல் கடிதத்தை ஒரு நாள் நீட்டி எல்லோர் முன்னிலையிலும் பளாரை செவிட்டில் வாங்கிக் கட்டிக் கொண்டான்.

அப்படியும் திருந்தாமல் அவன் ரோமியோ போல் தினமும் தொல்லை கொடுக்க பொறுக்க முடியாமல் கல்லூரி பிரின்ஸிபாலிடமே சென்று அவனைப் பற்றி புகார் செய்துவிட்டாள் கவிதா

கண்டிப்புக்குப் பெயர் போன அந்தக் கல்லூரி முதல்வர் உடனே... அந்த சேகரை டிஸ்மிஸ் செய்து கல்லூரியை விட்டே வெளியே அனுப்பி விட்டாரே!

சேகரும் அந்த அவமானம் தாங்காமல் கல்லூரியை விட்டு அகன்றவன் அதற்குப் பின் அவள் பக்கமோ கல்லூரிப் பக்கமோ தலை வைத்து படுக்கவில்லையே!

அப்படிப்பட்ட பொறுக்கியை, காதல் பித்துப் பிடித்து அலைந்து தறுதலையை போயா அவள் காதலிப்பாள்?

அவனை அடித்து கல்லூரியை விட்டே விரட்டி மற்ற மாணவிகளிடையே சரியான புதுமைப் பெண் 'என் பட்டமும் வாங்கியவளாச்சே.... அவளாவது... அந்த சேகரை காதலித்தாவது? அந்த சேகர் அன்று ஹோட்டலில் பார்த்தவன் நம்மை பழிவாங்க இப்படி ஒரு பிளான் செய்திருக்கிறான். என்ன செய்வது?

ஆனால்.... ஆனால்.... அதற்காக மகேந்திரன் லெட்டரைப் பார்த்ததும் நம்பி விடுவானா?

அதில் உள்ளதெல்லாம் உண்மை என நினைத்து அவள் மீது சந்தேகம் கொள்ள ஆரம்பித்து விட்டானா?

என்ன அநியாயம் இது?

அவன் குனிந்து அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான்.

என்ன... அடுத்து என்ன பொய் சொல்லலாம்? எப்படித் தப்பிக்கலாம் என்று பார்க்கிறாயா?

இல்லை

பின் வேறு என்னவாம்?

இதை நீங்கள் நம்புகிறீர்களா? அவள் லெட்டரை உயர்த்திக் காட்டினாள்.

நம்பாமல் எப்படி இருப்பது? நான் உன்னிடம் என் காதல் விஷயங்களை வெளிப்படையாக கூறினேன். ஆனால் நீ வேண்டுமென்றே மறைத்திருக்கிறாய் அப்படியானால் நீ தப்பு செய்திருக்கிறாய்!

**



## 14

### எல்லாம் முடிந்து விட்டது

மகேந்திரன் எல்லாவற்றையும் பேசி முடித்து விட்டான்.

தன் கைகளை மீறி எல்லா விஷயங்களுக்கும் நடப்பதை கவிதாவால் கொஞ்சமும் நம்ப முடியவில்லை.

பேசுவது அவன்தானா.... அல்லது அவள் காதுகள் தான் பொய்த்துப் போய்விட்டதா?

அவள் அப்படி சந்தேகம் கொள்வாள் என்று நினைத்தானோ என்னவோ திரும்பவும் அழுத்தந் திருத்தமாக உச்சரித்துக் காட்டினான்.

சொல்லக் கஷ்டமாகத்தான் இருக்கிறது. ஆனால் உண்மை அதுதான். நாம் இருவரும் கொஞ்ச நாட்கள் பிரிந்திருப்பதுதான் நல்லது.

என்ன ஒரு வார்த்தை... என்ன ஒரு பேச்சு... அவன் வாயில் இருந்து வந்து விட்டது...

பிரிந்திருக்க வேண்டுமாமே?

எவ்வளவு எளிதாய் அந்த வார்த்தையை உச்சரித்துவிட்டான். இப்படி தைரியமாக உச்சரிக்க அவனுக்கு எப்படி மனம் வந்தது?



அந்த வார்த்தையின் வீச்சிலே கவிதாவின் கண்கள் முழுவதும் குளமாகி விட்டன.

நிமிர்ந்து பார்க்கத் திராணியின்றி குனிந்தே தலையை வைத்திருந்தாள்.

எந்த முகம் அவளிடம் ஆசையாய் கொஞ்சக் கெஞ்ச பேசியதோ... அந்த முகம் அதே முகம் அவளிடம் கடுமையாய் இறுக்கத்துடன் பேசினால் அவளால் எப்படி நிமிர்ந்து பார்க்க முடியும்?

ஆயினும் அவளுள் அந்தக் கேள்விதான் உறுத்தியபடி கிளம்பியது. மனம் விட்டு ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்ளும் அளவுக்குப் பழகியிருக்கிறோம். சந்தோஷமும் இனிமையுமாய் குடும்பம் நடத்தியிருக்கிறோம். அப்படியும் அவனுக்கு அவள் மீது நம்பிக்கை வரவில்லை?

நீங்கள் என்னை நம்பவில்லையா? நடுங்கும் குரலில் அதையே கேட்டாள்.

அவன் அவளை அவள் சொல்வதை இந்த அளவு கூட நம்பாவிட்டால்.... இவ்வளவு நாட்கள் அவனும் குடும்பம் என்ற ஒன்றை நடத்தியதற்கு கூட எவ்வித அர்த்தமும் இல்லாமல் போய்விடுமே!

ஆனால் அவனது பதில் வித்தியாசமாக இருந்தது.

நம்புவது.. நம்பாதது.. எல்லாவற்றையும் விட்டுவிடு. ராமாயண காலத்தில் இருந்தே இந்தச் சோதனை நடக்கத்தானே செய்கிறது?

அவளுக்குக் கோபம் பொத்துக்கொண்டு வந்தது. அவள் சீதையோ... இல்லையோ...? ஆனால் அவளை சந்தேகப்பட அவன் ஒன்றும் ராமச்சந்திர மூர்த்தி அல்லவே? சராசரி மனுஷன்தானே! ஒரு லெட்டர் வந்ததும் இவ்வளவு நாள் நம் மீது பாசத்தைப் பொழிந்திருக்கிறாள் என்று கூட நினைக்காமல் சந்தேகப்பட்டு விட்டானே!

அவள் பொங்கும் ஆற்றாமையுடன் எரிச்சலும் கோபமும் தாக்க கொஞ்ச நேரம் என்ன செய்வது? எப்படி நடந்து கொள்வது என தெரியாமலே விழித்தாள்.

அவன் இப்போது பக்கத்தில் வந்து அமைதியாக அவளைப் பார்த்தான்.

இதோ பார் கவிதா நாம் இருவரும் இந்த வீட்டில்இதே ரூமில் மிக அந்நியோன்யமாக பொறாமை கொள்ளும் நெருக்கத்துடன் குடும்பம் நடத்தியிருக்கிறோம். வாழ்க்கையை மகிழ்ச்சியாய் கழித்திருக்கிறோம். ஆனால் இப்போது... என பேசியவன் ஒரு கணம் அப்படியே நிறுத்திவிட்டு இப்போது பிரச்சினை என்னவென்று தெரியுமா? என்று கேட்டான்.

அவள் புரியாதவளாய் கேட்டாள்.

என்ன?

நீ உன் கல்லூரி நாட்களில் அந்த சேகரை காதலித்தது ஒரு பிரச்சினை. அதைச் சொல்லாமல் என்னிடம் மறைத்தது இன்னொரு பிரச்சினை. எல்லாவற்றுக்கும் மேலாக நான் உன் மீது வைத்திருந்த நம்பிக்கை போயிற்று..

நம்பிக்கை போயிற்றா?

ம்ம்.. நம் கல்யாண நாட்களில்.. நம் முதலிரவு போன்ற சமயங்களில் நடந்ததை எல்லாம் கொஞ்சம் யோசித்துப் பார்! உன்னிடம் எவ்வளவு தெளிவாக சொல்லியிருந்தேன். எனக்கு எந்த விஷயத்தை மறைப்பதோ, எந்த விஷயத்திற்காகவும் பொய் சொல்லுவதோ சுத்தமாய்ப் பிடிக்காது என்று சிறு வயதில் இருந்து உண்மை விளம்பி போல் இருந்து விட்டதால் அப்படி ஒரு எண்ணம் தீவிரமாக என்மனதில் பதிந்து விட்டது. அதனாலே யார் பொய் சொன்னாலும் பிடிக்காது. அதிலும் கட்டிய மனைவியான நீ பொய் சொல்வது, என்னால் தாங்க முடியாத மன்னிக்க முடியாத குற்றம். நீ மறைத்து பொய் சொன்னது உன்மேல் எனக்கு பல சந்தேகங்களை வரவழைக்கிறது. அதனால் நாம் இனியும் கூடி வாழ்வது இயலாத காரியமும் கூட.. மேலும் இனிமையாய் வாழ்க்கை நடத்திய இந்த இடத்தில் உன்னை எதிரிபோல நினைத்து இனி வாழ்க்கை நடத்த வேண்டுமென்றால் அது மிகவும் கொடுமையாக இருக்கும். ஏனெனில் நீ விஷயத்தை மறைத்தது உன் நம்பகத் தன்மையை அழித்து விட்டது. நீ என் ... மேல் காட்டிய அன்பு, பாசம் எல்லாமே நடிப்புதானோ எனவும்நினைக்க வைத்து விட்டது. அதனால் வேறு வழியில்லை.... கொஞ்ச நாட்களும் நாம் இருவரும் பிரிந்திருப்பது தான் இருவருக்கும் நல்லது..

கொஞ்ச நாட்களா? என்றாள் அவள் திடுக்கிட்டு.

ம்ம்... நாட்கள் என்றால்.. சில மாதங்களா இருக்கலாம்... அப்படிப் பிரிந்திருப்பது தவறு நடந்ததற்காக நான் கொடுக்கப் போகும் தண்டனை என்று கூட வைத்துக் கொள்ளலாம்.. அல்லவா? படபடவெனச் சொல்லியவன் அதே வேகத்தில் நாளையே நீ உன் பிறந்தகத்திற்கு தந்தை வீட்டிற்கு கிளம்பலாம்... என்றான் அமைதியாக.

அவள் ஒரேடியாய் திடுக்கிட்டுத்தான் போனாள்.

கடைசியில் அவன் வாயில் இருந்தே அதை தெளிவாய் தீர்க்கமாய் சொல்லி விட்டான்.

இனி உனக்கு இங்கு இடமில்லை. பெட்டியைத் தூக்கிக் கொண்டு போ என்று.



கேட்டால் பிரிந்திருப்பதுதான் அவன் மனதில் ஏற்பட்ட சந்தேகத்தை காயமான சூழ்நிலையை மாற்றுமாம்.

என்னென்னவோ காரணங்களைச் சொல்கிறான்.

முக்கியமாய் அவள் தன் கல்லூரி நாட்களில் நடந்த காதல் விஷயத்தைச் சொல்லாததால் அவள் மீது கொண்டிருந்த நம்பகத் தன்மையை இழந்து அவள் காட்டும் அன்பு கூட வேஷம், நடிப்பு என்ற முடிவிற்கு வந்து விட்டானாம்!

அவன் சொல்வது எல்லாம் சரி ஆனால் அவள்..?

அவள்தான் எந்த தவறும் செய்யவில்லையே!

அதை அவன் நினைத்தும் பார்க்க வில்லையே!

மறுநாள் கவிதாவுக்கு பயங்கரமாய் விடிந்தது என்றுதான் சொல்ல வேண்டும்

மகேந்திரன் அதிகாலையிலேயே இறுகிய முகத்துடன் இன்று உன் உடைமைகள் எல்லாவற்றையும் பாக் செய்து வை. நீ கிளம்ப வேண்டும் அல்லவா?

அவள் திடுக்கிட்டுத்தான் செய்தாள்.

அவன் எதையும் விளையாட்டுக்குச் சொல்லவில்லை. நிஜமாகத்தான் சொல்லியிருக்கிறான்!

கல்யாணத்திற்கு முன் வேறு ஒருவனுடன் காதல் வைத்திருந்த குற்றத்திற்காக அவளை தண்டிக்கிறானாம். உண்மையில் அவள் நல்லவள், உத்தமி என்றால் அந்தக் காதல் விஷயத்தை அவனைக் கல்யாணம் செய்யும்போது வெளிப்படையாக சொல்லியிருக்க வேண்டுமாம்.

அப்படிச் சொல்லியிருந்தால் கூட சரி பழைய விஷயங்களை விடு என மன்னித்திருப்பானாம்...

ஆனால் இப்போது கல்லூரி மங்கை போல் அவள் இருந்திருக்கிறாள்.

அதனால் மன்னிப்பு கிடையாதாம்!

ஒன்றும் புரியாதவளாய்த்தான் இயந்திரம் போல் நடந்தாள்.

அவனுடன் ஆட்டோவில் கிளம்பி வீடும் வந்து சேர்ந்தாள்.

தந்தை உலகநாதர் திடீரென பெட்டியுடன் வந்து நிற்கும் மகளைப் பார்த்து திகைக்கத்தான் செய்தார். கூட மகேந்திரனும் வந்திருந்தது அவருக்கு ஓரளவு நிம்மதியையே தந்தது. கவிதாதான் ரொம்பவும் கஷ்டப்பட்டு தனது வாடிய முகத்தை தந்தை கவனித்து விடாத வண்ணம் வலுக்கட்டாயமாக சிரிப்பு ஒன்றை ஓட விட்டு சமாளித்துக் கொண்டிருந்தாள்.


மகேந்திரனும் தன் பங்கிற்கு அவரிடமும் கூற தயாராய் ஒரு பொய் வைத்திருந்தான். அதாவது அலுவலக நிமித்தமாக அவன் ஒரு மாத டூர் செல்வதாகவும் அதுவரை கவிதா இங்கு இருக்கட்டும்... எனவும் அவர் நம்பும்படி சொல்லி முடித்தான்.

கவிதா அவன் விட்டு விட்டு கிளம்புகையில், ஒரு நிமிடம்...? என தனியே அழைத்தாள்.

திரும்ப அழைக்க வருவதாக எண்ணம் இருக்கிறதா இல்லையா? என்றாள் சலனமற்ற குரலில்.

அவளது கேள்விக்குப் பதில் சொல்லாமல் ஓரிரு நிமிடங்கள் அமைதி காத்தவன் திரும்பி, யோசித்துச் சொல்கிறேன்... என விட்டேற்றியாய் ஒரு பதிலைச் சொன்னான்.

திரும்பிப் பாராமல் விறுவிறுவென நடந்தான் அவன்!



## 15

மகேந்திரன் அவளை விட்டுச் சென்று ஒரு வாரம் ஆகிவிட்டது.

அவனிடமிருந்து எந்தவித தகவலும் இல்லை. எந்த பதிலும் இல்லை.

ஒரேயடியாய் தன்னை மறந்து விட்டானா? இல்லை இவளுடன் வாழ்ந்து போதும் என தலைமூழ்கி விட்டானா?

அப்படியானால் அவனுடன் வாழ்ந்த வாழ்க்கை அந்த இனிமையான நாட்கள் எல்லாம் அவ்வளவுதானா?

நினைத்துப் பார்க்கவே அவளுக்கு மிகவும் கஷ்டமாக இருந்தது.

மகேந்திரன் அப்படி நடந்து கொண்டதில் நியாயமே இல்லை.

எவ்வித தவறும் செய்யாமல் அவள் தண்டிக்கப்பட்டிருக்கிறாள்.

அப்படியானால் தவறு செய்தது யார்?

யாரால்... அவள் பெரிய குற்றவாளி போல் ஆக்கப்பட்டு தண்டனையும் பெற்றிருக்கிறாள்?

சேகரா? அவள் தன்னை காதலிக்கவில்லை என்று பழிவாங்க இப்படி சதி செய்கிறான் இது மகேந்திரனுக்கு புரியவில்லையே





## 16

கவிதா பித்து பிடித்தவள் போல்தான் இருந்தாள்.

இந்த ஒரு மாதத்தில் என்ன நடக்கிறது. தன்னைச் சுற்றி சுழலும் வேகமான உலகத்தில் என்னென்ன நடந்து கொண்டிருக்கிறது என எது பற்றியும் அவள் அறியவில்லை. எதைப் பற்றியும் அவளுக்கு கவலை இல்லை.

துக்கம், கவலை, விரக்தி என எல்லாம் சேர்ந்து அழுத்தும்போது அடிமேல் அடி வாங்கியது போல் மரத்துப்போன மூளையுடன் ஒன்றும் தோன்றாமல் பிரமை பிடித்த நிலையிலேயே அவள் இருந்தாள்.

காலையில் எழுந்து இயந்திரம் போல் வீட்டு வேலைகளைச் செய்து விட்டு, கோயிலுக்கு கிளம்பி வந்து விடுவாள்.

அவள் வீட்டுப் பக்கத்திலேயே இருக்கும் குன்றிமலை முருகன் கோயில்.

பழங்காலக் கோவில்தான். இராஜ வம்சத்தில் வந்த சோழ மன்னர்களால் கட்டப்பட்டது என கல்வெட்டுகள் கூறுகிறது. பெரிய பெரிய தூண்கள், பல்வேறு சிற்பங்கள் எனக் கூடிய விஸ்தாரமான கோவில். ஆன்மீகமும் பக்தியும் கமழும் அமைதியான இடம்.

அந்தக் கோவிலின் குளத்தங்கரை படிக்கட்டுதான் அவளது இடம்!

அந்தப் படிக்கட்டில் நிறைய பேர் இறைவனின் சந்நிதானத்தில் ஓய்வெடுப்பதுபோல் உட்கார்ந்திருப்பர்.

கவிதா படிக்கட்டு ஒன்றில் அமர்ந்து குளத்தை வெறித்தபடி இருப்பாள். மணிக் கணக்கில் நேரம் போவது தெரியாமல்.

தந்தை உலகநாதரும் ஆரம்பத்தில் அவள் என்ன செய்கிறாள் என தேடி வந்து பார்த்தவர் அவள் கோயில் படிக்கட்டில் இருப்பதைப் பார்த்ததும் நிம்மதியடைந்து விட்டார்.

அதனாலே அவள் வெகுநேரம் கழித்து வந்தாலும் அவர் எதுவும் கேட்பதில்லை. அப்படியாவது அவள் தன் கவலையை குறைத்துக் கொள்ளட்டும் என விட்டு விட்டார்.

அன்றும் அப்படித்தான் கவிதா பதினோரு மணிக்கு தன் வேலைகளை எல்லாம் முடித்து விட்டு விறுவிறுவென குனிந்த தலையுடன் கோவிலுக்குள்

நுழைந்தாள். வழக்கமான குளத்தங்கரை படிக்கட்டில் போய் உட்கார்ந்து கொண்டாள்.

கண்களை அகல விரித்து குளத்தையே வெறிக்க ஆரம்பித்தாள்.

கொஞ்ச நேரம் சென்றிருக்கும்...

வெறித்தபடி எவ்வித உணர்வும் இல்லாமல் இருந்த அவளுக்கு தோளில் எதுவோ அழுத்துவது போல உணர்ந்து மூளை எச்சரித்தது!

மெல்ல உணர்வுக்கு வந்து பார்த்தவள் அப்படியே திடுக்கிட்டாள்.

அவளது தோளை உரிமையுடன் ஒரு ஆணின் வலுவான கரம் பற்றி அழுத்திக் கொண்டிருந்தது.

யாரது இப்படி? என நிமிர்ந்தவள் மேலும் திடுக்கிட்டுத் தான் போனாள்.

அங்கு... மகேந்திரன்! அதே வசீக புன்சிரிப்புடன்!

அவளுக்கு ஒரு கணம் மூச்சு நின்று விடும்போல்தான் இருந்தது.

அங்கு நிற்பவன் மகேந்திரனா?

அவன்.. அவன்தான் அவளைப் பார்த்து அந்த வசீகரச் சிரிப்பை சிரிக்கிறானா...? நடப்பதெல்லாம் நிஜம்... நிஜம்தானா? இல்லைக் கனவா?

இல்லை... இது உண்மையில்லை... இது பிரமை... வெறும் கனவாயிருக்கும்... அவளை வெறுத்து ஒதுக்கி பிரிந்து சென்ற அவனாவது வருவதாவது.. இப்டி விரக்தியில் இருப்பவர்களுக்கு மாயத் தோற்றங்கள் தோன்றுமாம்... அப்படித்தான் நமக்கும் தோன்றுகிறது போலும்... என்றபடி உள்ளுக்குள் நினைத்து அப்படியே கண்களை மூடி மறுபடியும் குனிந்து கொண்டாள். ஆனால்.. அவள் தோளைப் பிடித்த கரங்கள் படர்ந்து அவள் இரு தோள்களையும் பற்றியபடி பக்கத்திலேயே அவன் உட்கார்ந்ததும் தான் அது மகேந்திரன்தான். நடப்பது உண்மைதான் என்ற உணர்வுக்கு அவள் வந்தாள்.

இதமாய் அவளை தோளோடு அணைத்து அப்படியே தன் பக்கமாய் இழுத்து சாய வைத்து ஆதரவாய் பிடித்துக் கொண்டான் மகேந்திரன்!

இந்த ஒரு மாதங்களும் சரியான உணவு, தூக்கம், இல்லாமையால் அவள் உடம்பே பலஹீனமாய் போய், இப்போது உணர்ச்சிவசப்பட்ட சூழ்நிலையில் உடம்பே நடுங்க ஆரம்பித்தது.

அதை உணர்ந்தவன் போல் மகேந்திரன் ஒரு சேர அவளை தன்னோடு சாய்த்து அழுத்தியும் பிடித்துக்கொண்டான்.

நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்.



சொல்ல வேண்டியது அவன்தானே! திடீரென ஞானோதயம் தோன்றி அவளை மன்னித்து விட்டானா? அல்லது செய்த தப்பை உணர்ந்து விட்டானா...?

அவள் மனதுள் நினைப்பதை அறிந்து கொண்டவன் போல், எல்லாவற்றையும் உணர்ந்து விட்டேன்... என்று சொல்வதை விட எல்லாம் எனக்குத் தெரியும்... என்று சொல்வது சரியாக இருக்கும் என்றான்.

எல்லாம் தெரியுமா? என்ன தெரியும்?

நீ சொல்லியது எல்லாம் உண்மை.. உனக்கும் அந்தக் காதல் ரோமியோ சேகருக்கும் எந்தச் சம்பந்தமுமில்லை. நீ மாசுமறுவற்ற புத்தரை மாற்றுத் தங்கம் என்று அவன் சொல்வதைக் கேட்டு என்னவாயிற்று இவனுக்கு... தங்கம் அது இதுவென உளறுகிறானே என்றுதான் நினைத்தாள்.

நான் உளறவில்லை, உண்மையைத்தான் சொல்கிறேன். நீ சொன்னவை எல்லாம் நிஜம் என எனக்கு அப்போதே தெரியும்!

அதான் எப்படி? என்றாள் அவள்.

ரொம்பவும் சுலபம், உன் டயரியில் உன் கல்லூரித்தோழியின் முகவரி ஒன்றையும் அவளது தொலைபேசி நம்பரையும் எழுதி வைத்திருந்தாள். உடனே துரித கதியில் யோசித்து, போனில் அந்த தோழியிடம் விசாரித்தேன். உடனே உண்மை வெளிவந்து விட்டது...

அவள்... அவள்.... புவனா! அவள் பெயரைத்தான் எழுதியிருந்தேன்.. அவளிடமா விசாரித்தீர்கள்?

அவன் தலையாட்டினான். அவள் விடவில்லை.

எப்படி விசாரித்தீர்கள்? எனக்கும் சேகருக்கும் தொடர்பு உண்டா? சேகரை நான் காதலித்தேன் என்றா?

அவள் எரிச்சல் தொனியில் கேட்க சிரித்தான் அவன்.

அப்படி பட்டாணியை உடைப்பதுபோல் நேரிடையாய் கேட்டு உன்னை அசிங்கப்படுத்த நான் என்ன முட்டாளா? புத்திசாலியான உன்னைக் கட்டியிருக்கும் எனக்கும் கொஞ்சம் புத்திசாலித்தனம் வந்திருக்கும் அல்லவா?

இந் ஜஸ் எல்லாம வேண்டாம். விஷயத்தை சொல்லுங்கள்...! என்றாள் அவள் கறார் குரலில்.

சொல்கிறேன்... கண்மணி. ஆனால் இந்தக் கோபத்தை மட்டும் எனக்காக கொஞ்சம் குறைத்துக்கொள்ளேன்.... என்றான் கெஞ்சல் குரலில்.

முதலில் சொல்லுங்கள் பார்ப்போம்... என்றாள் அவளும் சினத்தை விடாமலே...

அதாவது உன் தோழி புவனாவிடம்... நான் உங்களது பழைய கல்லூரி மாணவன் ஒருவன் என்றும் என் நண்பன் ஒருவனின் தம்பிதான்

அந்த ரோமியோ சேகர் என்றும் புறநகிளேன். அந்த ரோமியோ சேகர் இப்போது தன்னுடன் படித்த பழைய கல்லூரி மாணவிகளின் முகவரியை எல்லாம் சேகரித்துக் கொண்டு.. இப்போதும் காதல் கடிதங்கள் கிறுக்கன்போல் அனுப்பி வருவதாகவும் அது என் நண்பனான அவனது அண்ணனை ரொம்பவும் சங்கடப்படுத்துவதாகவும் சொன்னேன். அப்படி அவளுக்கு ஏதாவது காதல் கடிதம் வந்ததா? என விசாரிக்கும் சாக்கில சேகரைப் பற்றிய முழு விபரங்களைக் கேட்டேன். அவள் ஒளிவு மறைவில்லாமல் மடைதிறந்தாற் போல் எல்லாவற்றையும் சொல்லிவிட்டாள். சேகர் உன் பின்னால் காதல் கிறுக்குப் பிடித்து ரோமியோ தொல்லை கொடுத்தது. பின் அவன் தொடர்ந்து தொந்தரவு தர நீ பிரின்ஸிபால் வரை சென்று கம்ப்ளைண்ட் செய்தது அதனால் அவர் அவனை கல்லூரியை விட்டு டிஸ்மிஸ் செய்தது.... பின் அவனும் டிஸ்மிஸ் செய்த அவமானம் தாங்காமல் ஏதோ வேலை தேடிக் கொண்டு வெளிநாட்டுப் பக்கம் ஓடிச் சென்றது.. என முழுக் கதையையும் சொல்லி நான் மனதில் வைத்திருந்த என கவிதா மாசு மருவற்ற தங்கம் என்ற நினைப்பை உறுதிப்படுத்தி விட்டாள்.

அவள் மூச்சு விடாமல் ஒரு இழுப்பில் அவ்வளவையும் சொல்லி முடித்தான்.

சொல்லியபடி அவள் கைகளில் பிடியை இறுக்கி அவளை அணைத்தான். அப்படியே மெல்ல முத்தமிடவும் போனான். விலகிக் கொண்டு சமாதானமடையாதவளாய் சிலிர்ப்புடனே அவனைப் பார்த்தாள்.

அப்படியானால் என்னைப் பற்றி... என் வருத்தம்... சோகம்... பற்றியெல்லாம்... எந்த அக்கறையும் இல்லாமல்தானே போயிற்று....

அவள் சொல்லி முடிப்பதற்குள் அதுதான் இல்லை. நான் இங்கு கோயில் வந்து உன்னை தினம் தினம் நீ அறியாமல் பார்த்து விட்டுச் சென்றேன் என்று சொன்னேனே... அது யார் சொல்லி என்று யோசித்துப் பார்த்தாயா? என்றான்.

அப்போதுதான் அவளுக்கும் அது உறைத்தது. அவனுக்கு எப்படி இங்கிருப்பது தெரியும்? யார் சொன்னார்கள்?

வேறு யார்? உன் தந்தை உலகநாதன்தான் சொன்னார்கள். தினமும் அவரை தினம் தினம் சந்தித்து விஷயத்தைச் சொல்லி உன் நலன் பற்றி விசாரித்து இந்தக் கோமாளிதானே? உன் மேல் அக்கறையில்லாமலா இந்தக் கோமாளி அப்படிச் செய்தான்?

அவள் நம்ப முடியாத வாய் பிளக்கும் ஆச்சரியத்தால் கொண்டாள்.

அப்படியா? தந்தை இதுபற்றி ஒன்றுமே என்னிடம் சொல்லவில்லையே?



சொல்ல வேண்டாம்... சமயம் வரும்போது நானே சொல்கிறேன்.. என அவரைத் தடுத்ததும் இந்தக் கோமாளிதானே?

அவன் சொல்லிவிட்டுச் சிரிக்க நிஜமாகவே அவன் தன் மீது அக்கறை கொண்டிருக்கிறான், தனக்காக வருந்தி உருகியிருக்கிறான் என்பதை உணர்ந்தவள் முதல் முறையாக இறுக்கம் தளர்ந்து இதழ்களில் மெல்லிய சிரிப்பலை ஒன்றை ஓடவிட்டாள். அதை எதிர்பார்த்து அதற்காக ஏங்கிநின்றவன் போல், அப்பாடா... புரிந்து கொண்டாளே! என உள்ளுக்குள் நினைத்தவன் சந்தர்ப்பத்தை விடாமல் அந்த அவளது செவ்விதழ்களில் மென்மையாக முத்தமிடவும் செய்தான்.

சட்டென அவன் செய்த செய்கையால் வெட்கிச் சிவந்தவள், கொஞ்சம் சிரித்தால் போதுமே.. உடனே வேலையை காட்டு விடுவீர்களே... என சிணுங்கத்தான் செய்தாள்.

பின் இருக்காதா..? எவ்வளவு அந்நியோன்யமாய் இப்பிணைந்து வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்தோம். திடீரென இப்படி பிரிந்து போட்டாற்போல் ஒரு மாதம் பிரிந்து, ஒன்றும் ஓடாமல் பிரமை பிடித்தாற்போல் ஆகி தவித்துப் போய் விட்டோமே....

மெய்யான வருத்தும் குரலில் அவன் கூற ஆச்சரியம் தாளவில்லைதான் அவளுக்கு. நிஜமாகவா? என்றாள்.

ம்ம்... உனக்கு நான் அப்படி சந்தேகப்பட்டு விட்டேன் என்று வருத்தம் ... சோகம்... ஆனால் எனக்கு உன்னைப் பிரிந்திருக்கிறேனே.. என்ற கவலை! ஆக... எல்லாம்... பார்த்தால் ஒன்றுதானே? ஆனாலும் இந்த ஒரு மாதத்தில் நரகத்தில் இருந்தது போல் வேதனையை அனுபவித்து விட்டோம் அப்படித்தானே?

அவன் சொன்னதும் தலையசைப்புடன் ஒரு கணம் வேதனையில் கழித்த நாட்களை நினைத்துப் பார்த்தவள் அப்படியே அநியாயமாய் அவன் நெஞ்சோடு ஒன்றிக்கொண்டாள்.

இனி.. நாம் பிரியவே கூடாது.. என அவள் முணுமுணுப்பது அவன் காதுகளில் கேட்டது.

அவளது பயந்து கலங்கிய நிலை, வாடிப்போன முகம் எல்லாவற்றையும் பார்த்த கிருபாகரனுக்கு மனதுள் தாங்காத வேதனைதான்!

ஆனாலும் இவளை ரொம்பத்தான் நோகடித்து விட்டோமோ? என உள்ளுக்குள் மருகினான்.

அதனாலே மெல்லக் குனிந்து அவள் காதுகளில், என்னை, நடந்தவைகளுக்கு மன்னித்துவிடு, கண்மணி, மன்னிப்பாயா? என்றான் மென்மைக் குரலில்.

அவள் பதிலுக்கு பேசாமல் கண்களை மூடி அசைவற்றுக் கிடந்தாள்... கொஞ்ச நேரம்.

அவன் திடுக்கிட்டு உலுக்க விழிகளைத் திறந்து பெருஞ்சிரிப்பு சிரித்தாள்... அவள்.

இதோ... இப்போது... இந்த நிமிடத்திலிருந்து மௌனவிரதம் இருக்கப் போகிறேன்! என்றாள் குறும்புப் பார்வையுடன் மை விழிக் கண்களை சிமிட்டியபடி

அவள் பழைய உற்சாகத்திற்குத் திரும்பி தன்னிடம் விளையாட ஆரம்பித்து விட்டாள் என்பதை நொடியில் புரிந்து கொண்டு அவனும் கலகலப்பானான்.

அவளை நெஞ்சோடு இறுகத் தழுவினான் மகேந்திரன்..!

சுகமான தென்றல் காற்று இனிமையாய் அவர்களை இறுக தழுவ ஆரம்பித்தது

(முற்றும்)

**அக்ஷயா குடும்ப நாவல்**

மலர் : 1 இதழ் : 1

வெளியிடுபவர் - ஆசிரியர் :

**எம்.எஸ்.முருகன்**

அக்ஷயா பப்ளிகேஷன்ஸ்

56/2, ஸ்ரீராம்பேட்டை தெரு, சி.ஐ.டி.நகர், நந்தனம், சென்னை-35.

போன். 044-24361734

கதையில் வரும் பெயர்களும் சம்பவங்களும் கற்பனையே. கதையை திருத்தவும் சுருக்கவும் ஆசிரியருக்கு உரிமை உண்டு.

**Akshaya Novel Monthly**

Owner, Publisher & Editor **M.S. Murugan,**

Published at :

New No. 56/2, Sri Rampet Street, C.I.T. Nagar,

Nandanam, Chennai - 600 035. Phone : 98405 14529